பக்கம்: எட்டு
விலை ரூபா 5.00

20 JAN 2001
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

# வலம்புரி
VALAMPURI

லாலா சோப்
அதிர்ஷ்டலாபச்சீட்டு
பரிசுகள்
தங்க நாணயங்களும்
பெறுமதியான சாறிகளும்
ரிக்கற் விபரம் 10/-
லாலா சோப்
அச்சுவேலி
(கி-1045)

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 தை 07 சனிக்கிழமை (20-1-2001) தொலைபேசி: 3378 ஒலி: 32

★ பொதுஜன ஐக்கிய முன்னணி அரசினால்

# ஜனநாயக ஆட்சிக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல்: எதிர்த்து ஆர்ப்பாட்டம்

## நாடுதழுவிய ரீதியில் ஐ.தே.க. நடத்தும்

(நமது நிருபர்)

**பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஆட்சிக்காலத்தில் நாட்டில் ஜனநாயகத்திற்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஐக்கிய தேசியக் கட்சி அடுத்த மாதம் முதல் நாடு தழுவிய ரீதியில் ஆர்ப்பாட்டங்களை நடாத்தப்போவதாக அக்கட்சியின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்கா சிங்கப்பூரில் தெரிவித்துள்ளார்.**

சிங்கப்பூரில் நடைபெற்று வரும் ஜனநாயகத்திற்கான சர்வதேசமாநாட்டில் ஆரம்ப உரையாற்றும் போதே ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இம்மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது;

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு இலங்கையில் சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலை நடத்தத்

(8ஆம் பக்கம் பார்க்க)

## வன்னிப் பகுதியில் விமானம் குண்டுவீச்சு

(வவுனியா)

வன்னிப் பகுதியில இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசங்களை இலக்குவைத்துஇலங்கை விமானப்படைக்குச்சொந்தமான மிக்ரகயுத்தவிமானம் பயங்கரமானகுண்டுத் தாக்குதலை மேற்கொண்டதாக வன்னிச்செய்திகள் தெரிவிக்கின்றன.

நேற்று மாலை5.15மணிக்கு இடம்பெற்ற இக்கண்மூடித்தனமான குண்டுவீச்சின் போது பேரிரச்சலினாலும் குண்டுவீச்சினாலும் வன்னிப் பகுதியில் புலிகளின்கட்டுப்பாட்டுப்பிரதேசமும் வவுனியாநகரமும் அதிர்ந்தவண்ணமிருந்தன. இதனால்மக்கள்

(8-ம் பக்கம் பார்க்க)

## நோர்வேத் தூதுவர் எரிக்சோலை யாழ்ப்பாணத்திற்கு வருமாறு மனிதநேய அமைப்புக்கள் அழைப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கையின் இன விவகாரத்தில் நடுநிலை ஏற்பாட்டாளராக செயற்படும் நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சோல்ஹெய்ம் யாழ்ப்பாணத்திற்கு விஜயமொன்றை மேற்கொள்ள மேண்டுமென்று மனித நேய அமைப்புக்களின் ஒன்றியம் அழைப்பு விடுத்துள்ளது.

47 மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியம் நேற்று அனுப்பிய கடிதத்திலேயே மேற்கண்டவாறு அழைப்பு விடுத்துள்ளது.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது

தமிழீழ விடுதலைப்புலிகள் அறிவித்துள்ள யுத்த நிறுத்தத்தை ஏற்று, அரசாங்கமும் யுத்த நிறுத்தத்தை மேற்கொள்ளும் வகையில் அரசாங்கத்தை இணக்கப்பாட்டுக்குக் கொண்டு வந்து சமாதானத்தை ஏற்படுத்த உதவுமாறும், யாழ். குடாநாட்டுக்கான விஜயமொன்றை மேற்கொண்டு, யுத்தஅனர்த்தம், பாதிப்புக்கள் மற்றும் யாழ். மக்களின் வாழ்வியல் நிலை பற்றி நேரடியாக அறிந்து கொள்ள வேண்டுமெனவும், இதனடிப்படையில் யாழ்ப்பாணத்துக்கான விஜயமொன்றை தாங்கள் மேற்கொள்ள வேண்டுமென்றும் அக்கடிதத்தில் கேட்கப்பட்டுள்ளது. (இ)

## திருச்செல்வத்தை உடன் விடுதலை செய்க
### ஜனாதிபதிக்கு சங்கரி கடிதம்

(மட்டக்களப்பு)

கொழும்பு வெள்ளவத்தையில் வைத்துபயங்கரவாத புலனாய்வு துறையினரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள யாழ்ப்பாணப் பத்திரிகையாளர்ஏ.என் எஸ். திருச்செல்வம் விவகாரம் குறித்து தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர் வீ.ஆனந்தசங்கரி ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளார்.

இது தொடர்பாக அவர் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள அவசர கடிதத்தில் கடந்த 2ம் திகதி கைது செய்யப்பட்ட இவர் எங்கே தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்ற விபரம் இவரது மனை

(8 ஆம் பக்கம் பார்க்க)

## காரணம் இல்லாத கைது
## சுதந்திர ஊடகவியலாளர் ஜனாதிபதிக்கு கடிதம்

யாழ்ப்பாணத்தின் பிரபல பத்திரிகையாளர் ஏ. என். எஸ். தி ச்செல்வத்தை உடனடியாக விடுதலை செய்யுமாறு கோரி ஜனாதிபதி சந்திரிகாவிடம் சுதந்திர ஊடக இயக்கம் அவசர கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

காரணம் எதுவும் கூறாமல் தடுத்துவைக்கப்பட்டுள்ள பத்திரிகையாளர் திருச்செல்வத்தை சர்வதே மன்னிப்பு உரிமைகள் சட்டங்களுக்கு ஏற்ப கௌரவமான முறையில் நடத்தவேண்டுமென்றும் விரைவில் அவரை விடுதலை செய்ய வேண்டுமென்றும் கேட்கப்பட்டுள்ளது. (வ)

## எரிக்சோல் வருகிறார்?

(கொழும்பு)

நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக்சோல்ஹெய்ம் விடுதலைப்புலிகளின் யுத்த நிறுத்தஅறிவிப்பு முடிவடையும் இம்மாதம் 24ந்திகதிக்குள் சமாதான முயற்சி இட்டங்களுடன் மீண்டும்இலங்கைவருவார் என நோர்வே தூதரகவட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (இ)

## பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வுகள் தொடரும்?
### பிரச்சாரம் இன்று ஆரம்பம்

(வடமராட்சி கிழக்கு)

தமிழ் மக்களின் அபிலாசை சுய நிர்ணய உரிமையே என்பதை வெளிப்படுத்திய யாழ். பல்கலைக் கழக சமூகத்தின் பொங்கு தமிழ் எழுச்சிகொள்கைப் பிரகடனத்தின் அடிப்படையில் எதிர் காலத்தில் எழுச்சிப்போர் எவ்வாறுமேற்கொள் ளப்படவேண்டும் என்பது தொடர்பாக நேற்று பல்கலைக் கழக சமூகத்தினரால் கலந்துரையாடப்பட்டது.

இதேவேளைஇன்று 'பொங்கு தமிழ்' எழுச்சி நிகழ்வின் தொடர்ச்சிப் போராட்டம் தொடர்பாக பல்கலைக்கழக சமூகக் குழுக்கள் பொது மக்களுக்கு வீடு வீடாகச் சென்று விளக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ-43)

## விடுதலைப்புலிகள் பற்றி பிரிட்டிஷ் ஆராய்கிறது

தமிழீழ விடுதலைப் புலிகளை சர்வதேச பயங்கரவாதப் பட்டியலில் சேர்த்துக் கொள்வது தொடர்பாக அடுத்த மாதம் தீர்மானிக்கப்படவுள்ளதாக கொழும்பிலுள்ள பிரிட்டிஷ் தூதரக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இது சம்மந்தமாக அவர் மேலும் தெரிவிக்கையில்;

இவ்விடயம் தொடர்பாக பிரிட்டிஷ்உள் நாட்டுஅமைச்சு பல்வேறு உலக நாடுகளில் விடுதலைப் புலிகளின் செயற்பாடுகள் குறித்து விபரங்களைப் பெற்றுவருவதாகவும் இலங்கையிலும்விபரங்களைத் திரட்டி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ம)

## மட்டு.மாவட்ட மாணவர் அமைப்பின் ஹர்த்தாலுக்கு படையினர் தடை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் சுதந்திர மாணவர் முன்னணி என்ற அமைப்பினரால் இன்று அழைப்பு விடுக்கப்பட்டுள்ள ஹர்த்தாலுக்கு பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்கக் கூடாது என்றும் இக் ஹர்த்தால் சட்ட விரோதமானது என்றும் மட்டக்களப்பில் பாதுகாப்புப் படையினரால் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அரசு விடுதலைப் புலிகளுடன் யுத்த நிறுத்தம் செய்து சமாதானப் பேச்சுவார்த்தையை மேற்கொள்ள சர்வதேச சமூகம் அரசிற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தும் யாழ் பல்கலைக் கழக சமூகத்தின் பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்ச்சிக்கு ஆதரவு தெரிவித்தும் சுதந்திர மாணவர் முன்னணி இக் ஹர்த்தாலுக்கான அழைப்பை விடுத்திருந்தது.

இக் ஹர்த்தாலுக்கு பொது மக்கள் ஒத்துழைப்பு வழங்கக்

(8 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சிலைகள் புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். நகர் ஆஸ்பத்திரி வீதியில் காணப்படும் பெரியார்களின் சிலைகள் தற்போது மாநகர சபையினரால் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

புனரமைப்பு வேலைகள் நிறைவடைந்ததும் அவற்றைப் பராமரிக்கும் பணி யாழ் வர்த்தகர் சங்கத்திடம் கையளிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

(உ-104)

## அநாதரவான நிலையில் சடலம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபை காரியாலயத்திற்கு அருகில் காணப்பட்ட அநாதரவான சடலம் ஒன்று அடையாளம் காணும் பொருட்டும் பிரேத பரிசோதனையின் பொருட்டும் யாழ் போதனா வைத்தியசாலை சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

மூதாட்டியான பெண்மணி ஒருவரின் சடலமே இவ்வாறு வைக்கப்பட்டுள்ளது.

(உ-104)

## சமுர்த்தி அலுவலர் பிரச்சினை தீரும்

(ஊர்காவற்றுறை)

யாழ். மாவட்டத்தில் சமுர்த்தி அலுவலர்கள் எதிர்நோக்கும் இடப்பிரச்சினை, தளபாடப் பற்றாக்குறை என்பன விரைவில் தீர்க்கப்படும் என வடக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு புனரமைப்பு மற்றும் இந்து கலாச்சார தமிழ் விவகாரங்களுக்கான அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

அண்மையில்சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கும், அமைச்சருக்கும் இடையே யாழ்ப்பாண அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் பிரச்சினையினை சம்பந்தப்பட்ட அமைச்சின் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு விரைவில் தீர்த்து வைக்க நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்துள்ளார்.

இந் நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் வி. கே. குகேந்திரன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் என். மதனராஜா ஆகியோரும் பிரசன்னமாகி இருந்தார்கள். (உ-75)

## பஜனை ஊர்வலம்

(சங்கானை)

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலய வருடாந்த பஜனை ஊர்வலம் நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெற உள்ளது.

ஆலய முன்றலில் காலை 7 மணிக்கு விஷேட பூசை வழிபாடுகளுடன் ஆரம்பமாகி மூளாய் வீதியூடாக மாவடி- சித்தன்கேணியை அடைந்து பிள்ளையார் ஆலயத்திலும், பின் வழக்கம்பரை அம்பாள் ஆலயத்திலும் தங்கி தொல்புரம் வீதிவழியே சுழிபுரம் சென்றடைந்து மீண்டும் மூளாய் ஊடாக ஆலயத்தை சென்றடையும்.

இவ் ஊர்வலம் 31 ஆவது வருட ஊர்வலமாகும். இதே வேளை, இவ் வருடம் சுவாமி புதிய மஞ்சத்தில் எழுந்தருள இருப்பதும் குறிப்பிடத்தக்கது. (உ-ப-18)

## தேங்காய் விலை உயர்வு

(ஆவரங்கால்)

யாழ் குடா நாட்டில் அதிகரித்த தேங்காய் விலை காரணமாக பொதுமக்கள் பெரிதும் பொருளாதார இடைஞ்சல்களை எதிர் நோக்கி வருகின்றனர். (உ-57)

## பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

இம்மாதம் 18ஆம் திகதி வெளியிடப் ட்ட பட்டியலின் படி, வெளிமாவட்டங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களது இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாகத்தரப்படுகின்றன.

### சங்கானை

| | |
|---|---|
| 174996 ஏ | 175309 டி |
| 176575 பி | 176673 ஏ |
| 176859 ஏ | 176899 ஏ |
| 178693 ஏ | 178746 பி |
| 179022 ஏ | 179022 ஈ |
| 170621 ஏ | 177461 ஏ |

### நல்லூர்

| | |
|---|---|
| 177144 ஏ | 165883 ஏ |
| 166809 ஏ | 178529 ஏ |
| 178642 பி | 179004 ஏ |
| 172724 பி | 176559 ஏ |
| 176718 ஏ | 176904 பி |
| 178578 ஏ | 178633 பி |
| 178723 பி | 178915 பி |

### தெல்லிப்பழை

| | |
|---|---|
| 178536 ஏ | 178539 பி |
| 178684 பி | |

### உடுவில்

| | |
|---|---|
| 173138 ஏ | 176710 சி |
| 178515 பி | 178515 எப் |
| 178613 சி | 178703 ஏ |
| 169358 ஏ | 175809 ஏ |
| 175809 ஈ | |
| 176575 சி | 176673 பி |
| 176860 ஏ | 176980 ஏ |
| 178724 ஏ | 178907 ஏ |
| 179022 பி | |

### கோப்பாய்

| | |
|---|---|
| 170621 பி | 177462 ஏ |
| 163039 ஏ | 177144 பி |
| 165883 பி | 169371 ஏ |
| 178587 ஏ | 178642 சி |
| 179004 பி | 174720 ஏ |
| 176612 ஏ | 176835 ஏ |
| 178546 ஏ | 178578 பி |
| 178635 ஏ | 178800 ஏ |
| 17898 ஏ | 169310 ஏ |
| 178536 பி | 178569 ஏ |
| 178684 சி | 160621 ஏ |
| 173138 பி | 176932 ஏ |
| 178515 சி | 178581 ஏ |
| 178676 ஏ | 178731 ஏ |
| 169358 பி | 175809 பி |
| 175809 எப் | 176645 ஏ |
| 176693 ஏ | 176861 ஏ |
| 176980 பி | 178724 பி |
| 178922 ஏ | 179022 சி |
| 170502 ஏ | 177425 ஏ |
| 177473 ஏ | 177118 ஏ |
| 177144 சி | 165883 சி |
| 176823 ஏ | 178589 ஏ |
| 178643 ஏ | |

### சண்டிலிப்பாய்

| | |
|---|---|
| 174930 ஏ | 176612 பி |
| 176865 ஏ | 178546 பி |
| 178614 ஏ | 178718 ஏ |
| 178879 ஏ | 178984 ஏ |
| 176950 ஏ | 178538 ஏ |
| 178569 பி | 178697 ஏ |
| 160755 ஏ | 176710 ஏ |
| 176956 ஏ | 178515 டி |
| 178613 ஏ | 178828 ஏ |
| 178676 பி | |
| 178836 ஏ | 178994 ஏ |
| 179013 டி | 178909 ஏ |
| 179013 ஏ | 178909 பி |
| 179013 பி | |

## கப்பலில் யாழ் வரும் பொருட்களுக்கான கட்டணம் குறைப்பு

(கொழும்பு)

யாழ். குடா நாட்டுக்கு கப்பலில் பொருட்களை ஏற்றிச் செல்வதற்கான கட்டணத்தை அரசாங்கம் குறைத்துள்ளது.

இக்குறைப்பு நடவடிக்கை உடனடியாகவே அமுலுக்கு வந்துள்ளது.

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு ஒரு மெற்றிக் தொன் பொருளை ஏற்றிச்செல்ல 40 டொலர் முதல் 60 டொலர்வரை கட்டணமாக அறவிடப்பட்டு வந்தது.

தற்போது இத்தொகை 30 டொலர்களாக குறைக்கப் பட்டுள்ளது.

இக்கட்டண குறைப்பு, யாழ்.குடா நாட்டில் பொருட்களின் விலை குறைவுக்கு வழியேற்படுத்தும்என நம்பப்படுகிறது. (உ)

## படலை

## கழற்றிய விடலைகள் பொலிஸ் விசாரணையில்

(சங்கானை)

ஊரடங்கு நீக்க உத்தரவைப் பயன்படுத்தி ஒரு வீட்டுப் படலையை கழற்றி இன்னொருவர் வீட்டின் முன் போட்டு ரவுடித்தனம் புரிந்தவர்களை பொலிஸார் விசாரணை செய்து வருகின்றனர்.

கடந்த தைப்பொங்கல் தினத்தன்று இரவு பண்ணாகம் பகுதியில் உள்ள வீட்டில் இளைஞர் சிலர் புரிந்த விளையாட்டே இவ்வாறு வினையானது.

படலையைப் பறிகொடுத்தவர் மானிப்பாய் பொலிஸில் செய்த முறைப்பாட்டினையடுத்தே சந்தேக நபர்கள் மீது விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

இதேபாணியில், அன்றைய தினம் சுழிபுரம் சுகாதார பரிசோதகரின்பெயர்ப்பலகையும் கழற்றி வீசப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(உ-ப-18)

## சத்திரசிகிச்சையின் போது உணர்விழக்க செய்யும் வைத்தியர்க்கு தட்டுப்பாடு

(கொழும்பு)

சத்திர சிகிச்சையின் பொருட்டுநோயாளரை உணர் விழக்கச் செய்யும் மருத்துவ நிபுணர்களுக்கு நாடு முழுவதிலும் பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது.

இதன் காரணமாக சத்திர சிகிச்சைகளை நடத்தி முடிப்பதில் பல சிக்கல்கள் எதிர் நோக்கப்படுகின்றன.

உணர்விழக்கச் செய்யும் துறையில் நிபுணத்துவம் பெறுவதற்கென வெளிநாடுகள் செல்லும் வைத்தியர்கள் நாடு திரும்புவதில் காட்டி வரும் அசிரத்தைப் போக்கே இத் தட்டுப்பாட்டுக்கு காரணம் என அறியப்பட்டுள்ளது.

நாட்டிலுள்ள 66 உணர்விழக்கச் செய்யும் நிபுணர்களில் 38 பேர் மட்டுமே தற்போது சேவையில் உள்ளனரென கூறப்படுகிறது.

இதேவேளை இத்துறையில் ஒருவரை நிபுணராக்க 5வருடங்கள் செலவாகின்றமை குறிப்பிடத்தக்கது. (உ)

## மொறிசியஸில் மஹா கும்பாபிஷேகம்

மொறீசியஸ் நாட்டின் போட் லூயிஸ் நகரில் அமைந்துள்ள அருள்மிகு சொக்கலிங்கம் மீனாட்சி அம்மன் ஆலய மஹாகும்பாபிஷேகம் நேற்று நடைபெற்றது

அத்துடன் இந்த ஆலயத்தில் புதிதாக நிர் மாணிக்கப்பட்ட 71 அடி உயரமான பஞ்சதள இராஜ கோபுரத்திற்கும் கும்பாபிஷேகம்நடைபெற்றது.

இக்கோபுரம் யாழ்ப்பாணம் அராலியூர் சிற்பக் கலைஞர்கந்தசாமி கோபாலசிங்கத்தின் கைத்திறனில் உருவானது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

(உ)

## வல்லையில் ஆஞ்சநேயருக்கு ஆலயம்

(அரியாலை)

வல்லை முனீஸ்வரர் ஆலயத்திற்கு அருகாமையில் நவீன முறையில் ஆஞ்சநேயர் ஆலயம் ஒன்று மிக விரைவில் அமைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எண்கோண மண்டபத்தையும் சுற்றுப் பிரகாரத்தையும் கொண்டதாக இவ் ஆலயம் அமைக்கப்படவுள்ளது.

இதேவேளை, மேற்படி பகுதியில் ஆஞ்சநேயர் படம் வைத்து வழிபாடு இடம் பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (உ-106)

## மணிவிழா ஒத்திவைப்பு

(அரியாலை)

பேராசிரியர் அ. சண்முகதாஸின் மணிவிழா எதிர் வரும் பெப்ரவரி மாதம்4 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக மணிவிழா அமைப்புக்குழுத் தலைவரும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதியுமான திருநாவுக்கரசு கமலநாதன் தெரிவித்துள்ளார்.

தைத்திங்களில் மணிவிழா நடத்துவதற்கான ஏற்பாடுகள் நடைபெறுவதாக முன்னர் அறிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(உ-10)

## அடுத்த மாதம் இயங்கும்

(கொழும்பு)

யாழ்ப்பாண மேல் நீதிமன்றத்தை அடுத்த மாதம் முதல் மீண்டும் இயங்கவைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப் போவதாகசட்டமா அதிபர்திணைக்களம் அறிவித்துள்ளது.

(உ-5)

## மாவட்ட செயலகத்தில் பரிசோதனை

(வன்னி)

இராணுவ கட்டுப்பாடற்ற வன்னிப் பிரதேசத்துக்கு எடுத்துச்செல்லப்படும் பொதிகள் இனி வவுனியா மாவட்ட செயலகத்தில் வைத்து சோதனை இடப்படும்.

இதற்கான ஏற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டு வருவதாக வவுனியாமாவட்டஅரச அதிபர் கே. கணேஸ் தெரிவித்துள்ளார்.

வன்னி இராணுவகட்டளை தலைமையகத்தில் நடைபெற்ற உயர்மட்ட மாநாட்டில் இந்த விடயம் தொடர்பாக ஆராயப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (தி)

## தட்டுப்பாடு

(மந்திகை)

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் போலியோ மருந்துக்குபெரும் தட்டுப்பாடு நிலவுகிறது.

(உ-23)

## கார் விபத்து

(மந்திகை)

மந்திகை சாவகச்சேரி வீதியில் கார் ஒன்றுடன் ஏற்பட்ட விபத்தில் மிருசுவில் விடத்தற்பளையிலிருந்து இடம பெயர்ந்து அளவெட்டியில் வசித்த சின்னடி ஜெபராசா (வயது43) காயமடைந்துபருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில்அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-23)

## படக்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகும திரைப்பட வட்டமும் இணைந்து வழங்கிவரும் திரைப்படக்காட்சித் தொடரில்''தமிழ்மத்திய தர சினிமாவில் கமலகாஸன்''என்ற தலைப்பின் கீழ்2 வது திரைப்படமாக கே.விஸ்வநாத் இன் ''சலங்கை ஒலி'' எனும் திரைப்படம் இன்று மு.ப10.00 மணிக்கு புவியியற்துறை மண்டபத்தில் இடம்பெறும்

ஆர்வலர்கள் யாவரும் கலந்து கொள்ளலாம் என புறநிலைப்படிப்புகள் அலகின் இணைப்பாளர் பேராசிரியர் இரா சிவச்சந்திரன் தெரிவித்துள்ளார். (உ)

## போட்டி

(கோப்பாய்)

கோப்பாய்க் கோட்டத்திற்கிடையேயான, ஆரம்ப பிரிவுக் கற்பித்தல் உபகரணப் போட்டி, இம் மாதம் 25ஆம் திகதி வியாழக் கிழமை புத்தூர் சோமாஸ் கந்தாக் கல்லூரியில் நடைபெறுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப் பட்டுள்ளதாக கோப்பாய்க் கோட்டக் கல்விப் பணிப்பாளர் இ. சிவஞான சுந்தரம் தெரிவித்துள்ளார். (உ- 79)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
இலங்கை.
வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகு
வெளிவாரிப் பரீட்சைகள்

**முதற்கலைத் தேர்வு-1999**
**வணிக - மாணி**
**பகுதி II - 1999**
**சிறப்புக் கலைத் தேர்வு**
**பகுதி - III - 1998**

மேற்படி பரீட்சைகள் 02-02-2001 ஆம் திகதி ஆரம்பமாகின்றன.

* முதல் வணிக தெரிவு - 1999 இல் அடிப்படைக் கணிதத்தை EX BM1.0) துணைப்பாடமாக விண்ணப்பித்த பரீட்சார்த்திகள் மேற்படி பாடத்திற்கு தோற்றுமாறு கோரப்படுகின்றனர்; பரீட்சார்த்திகள் தமது அனுமதி அட்டையையும், நேர சூசியையும் 26 - 01 - 2001 திகதி தொடக்கம் வெளிவாரி பரீட்சைகள் அலகில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளவும்.
மேற்படி பரீட்சைகள் வவுனியா வளாகத்திலும் நடைபெறும்.

**பதிவாளர்.**

(கி-1342)

நல்லூர் ... மன்றம் யாழ்ப்பாணம்

## தப்பியோடிய படையினர் அடங்கிய பௌத்தபிக்கு தலைமையிலான

# கொள்ளைக்கூட்டம் கைது

### நீர்கொழும்பில் அதிர்ச்சி தரும் சம்பவம்

(கொழும்பு)

பௌத்த பிக்கு ஒருவரின் தலைமையில் இயங்கி வந்த கொள்ளைக் கோஷ்டி ஒன்றினை கடந்த செவ்வாய் இரவு நீர்கொழும்பு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

படல்சம கெகல் எல்லதும மோதர புராண விகாரை யின் பிரதம குருவான 45 வயதுடைய மிகத் வெவ தம் மிந்த தேரோ என்பவரின் தலைமையில் இயங்கி வந்த கொள்ளைக் கோஷ்டியினரை நவீன ஆயுதங்களுடன் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மேற்படி பௌத்த பிக்கு தனது காவி உடையை களைந்துவிட்டு காற்சட்டை சேட் அணிந்து கொள்ளைக்குச் செல்ல தயார் நிலையில் இருந்தவேளை, இவருடன் தங்கியிருந்த பெண்ணொருவருடன் கைதுசெய்ததாகவும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கைதுசெய்யப்பட்ட இக் கோஷ்டியில், இராணுவத்திலிருந்து தப்பிவந்தோரும் விமானப்படையில் இருந்து தப்பிவந்தோரும் காணப்பட்டதாகவும், இக்கொள்ளைக் கோஷ்டி எக்கல வர்த்தக வங்கி குருநாகல், கட்டான வட்டகல ஆகிய இடங்களில் உள்ள எரிபொருள் நிலையங்கள் உட்பட பல வீடுகளிலும் கொள்ளையிட்டதாக மேலும் தெரியவந்துள்ளது. (உ-தி)

#### பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ்

## கைதாகும் தமிழர்கள் தனித்து வைக்கப்படுவர்

அவசரகாலச் சட்டம், பயங்கரவாத தடைச்சட்டம் ஆகியவற்றின் கீழ் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்படும் தமிழ் இளைஞர்கள் சிறைச்சாலைகளில்ஏனையகைதிகளுடனும் குற்றவாளிகளுடனும் தடுத்து வைக்கப்படும் நடைமுறை மாற்றப்பட்டுள்ளது.

இவ் விடயம் தொடர்பாக ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினர்கள் நீதியமைச்சின் கவனத்திற்கு கொண்டு வந்ததையடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அவசரகால பயங்கரவாத தடைச்சட்டங்களின் கீழ் கைது செய்யப்படுபவர்களையும் ஏனைய குற்றவாளிகளையும் சேர்த்து ஒரேசிறைச்சாலையில் தடுத்து வைக்கப்படுவதால் ஏற்படும் உடல் உள பாதிப்புக்கள் குறித்து நீதியமைச்சுக்கு சுட்டிக்காட்டப்பட்டதையடுத்தே இந்த நடை முறை அமுல்ப்படுத்தப்பட்டுள்ளது. (உ-5)

## செய்திக் கொத்து

### பொதுக் கூட்டம்

யாழ்.கிரிக்கெட் மத்தியஸ்தர்கள் சங்க வருடாந்த பொதுக்கூட்டம நாளை ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரியில் சங்கத்தலைவர் வி.பாலசிங்கம் தலலமையில் நடைபெறும்.

இப்பொதுக் கூட்ட நிகழ்வில் 1998,1999 ஆம் ஆண்டுகளில் நடைபெற்றகிரிக்கெட் மத்தியஸ்தர் தெரிவுப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கப்படும் என்றும், அனைத்து மத்தியஸ்தர்களையும் சமூகந் கொடுக்குமாறு சங்கச் செயலாளர் எஸ்.சிறீகாந்தன் கேட்டுள்ளார். (உ)

### தொடரும் திருட்டுகள்

(இணுவில்)

கந்தரோடை, உடுவில் பகுதிகளில் அண்மைக் காலங்களில் இரவு நேரத் திருட்டுக்கள் அதிகரித்துள்ளன.

அண்மையில், கந்தரோடை உடுவில் வீதியிலுள்ள பல சரக்கு கடையொன்று இரவு வேளை உடைக்கப்பட்டு பல்லாயிரம் ரூபா பெறுமதியான பொருட்கள் களவாடப்பட்டுள்ளதாய் தெரியவந்துள்ளது.

அத்துடன் கந்தரோடை உபதபால் கந்தோரினை உடைத்த திருடர், அங்கிருந்த பணம் மற்றும் பெறுமதி வாய்ந்த முத்திரைகளை அபகரித்துச் சென்றமை குறிப்பிடத்தக்கது. (உ-49)

### நியமனக் கடிதத்தைப் பெறுக

(துன்னாலை)

தென்மராட்சி கல்விவலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் அண்மையில் பட்டதாரிப் பயிலுநர் ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்ட இருவர், இன்னமும் தமது நியமனக் கடிதங்களைப் பெற்றுச் செல்லவில்லை என வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

மிருசுவில் முகவரியுடைய கந்தையா சுகந்தன், யாழ் வீதி யாழ்ப்பாணம் என்ற முகவரியைச் சேர்ந்த வனிதா நவரத்தினம் ஆகிய இருவருடைய நியமனக் கடிதங்களே இன்னமும் வலயக் கல்வித் திணைக்களத்தில் உள்ளன. (உ-41)

### அதிபர்க்கு கோரிக்கை

(கோப்பாய்)

தரம் ஒன்று தொடக்கம் தரம் 11 வரை, கல்வித் திணைக்களத்தால் அனுப்பி வைக்கப்பட்ட கிறிஸ்தவம், றோ. க. பாட நூல்கள், பற்றாக் குறையாக உள்ளதெனவும் பாடசாலைகளில் பற்றாக் குறையாக உள்ளதும் தேவையானதுமான பாட நூல்களின் விபரத்தைத் தமக்கு அனுப்பிவைக்குமாறு யாழ். மறைக்கல்வி நிலைய இயக்குநர் அருட்திரு F. X. நேசராசா பாடசாலை அதிபர்களைக் கோரியுள்ளார். [உ-79]

### சேவைக்கால செயலமர்வு பிற்போடல்

(யாழ்ப்பாணம்)

தீவகக் கல்வி வலய ஆசிரியர்களுக்கு இன்று சனிக்கிழமை நடைபெறவிருந்த இந்து சமயம், கணிதம், சங்கீதம் ஆரம்பக்கல்வி ஆகியவற்றின் பாடமேம்பாடு தொடர்பான சேவைக்காலச் செயலமர்வுகள் யாவும் பிற்போடப்பட்டுள்ளன.

இச் செயலமர்வுகள் தொடர்பாக பின்னர் அறிவிக்கப்படுமென தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் பி. விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார். (உ)

### முதல்பெண் பிரதமர் பெயரில் பாடசாலை

(கொழும்பு)

''ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க'' எனும் பெயரில் ஆரம்ப பாடசாலை ஒன்று மாத்தளை நகரில் புதிதாக நிர் மாணிக்கப்பட்டுள்ளது. இச்சிறுவர் பாடசாலை எதிர் வரும் 22 ஆம் திகதி வைபவ ரீதியாக திறந்து வைக்கப்படும். (தி)

### நஞ்சருந்தி மரணம்

(யாழ்ப்பாணம்)

நஞ்சருந்தி ஆபத்தான நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட ஒருவர் நேற்று முன்தினம் மரணமானார்.

குப்பிளான் வடக்கைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான பொன்னம்பலம் குகதாசன் (வயது 28) என்பவரே இவ்வாறு மரணமானார். (உ-104)

## இராசி பலன்

20-1-2001 (தை 7, சனி)
ஏகாதசி ந.ப 12 19 வரை
அனுசம் மு.ப 9 05 வரை
ராகுகாலம் 9.35- 11.05
சுபநேரம் 3 35- 5 05
சித்தம், ஏகாதசி விரதம்.

**மேடம்**
அமைதியின்மை, தேவையற்ற பிரச்சினை, காரிய தாமதம், பிரயாண பயம்.

**இடபம்**
போசன சுகம், களஸ்திர சுகம், பிரயாணம், கௌரவம்.

**மிதுனம்**
சத்துரு ஜெயம், முயற்சி விருத்தி, சுகவாழ்வு, மன மகிழ்ச்சி.

**கடகம்**
வியாதி, உளச்சோர்வு, தாழ்வு நிலை, காரிய தாமதம்.

**சிங்கம்**
துணிவு ஏற்படாமை, உறவினரால் வெறுக்கப்படல், காரிய அனுகூலம், நம்பிக்கைக் குறைவு.

**கன்னி**
சென்ற இடத்தில் செல்வாக்கு, இனிய அனுபவம், வாக்கு மேன்மை, முயற்சி வெற்றி.

**துலாம்**
விவாதம், மதிப்புக்குறைவு, காரிய தாமதம், தனவிரயம்.

**விருச்சிகம்**
ஆழ்ந்த சிந்தனை, போசன சுகம், ஜனவசியம், முயற்சி பலிதம்.

**தனுசு**
அலைச்சல், கோபப்படுதல், சுபசெலவு, பிரயாணம்.

**மகரம்**
தனலாபம், மதிக்கப்படுதல், குடும்ப சுகம், காரியம் நிறைவேறும்.

**கும்பம்**
பணியாளர் உதவி, முயற்சி கைகூடும், தொழில்மேன்மை, பெரியோர் சந்திப்பு.

**மீனம்**
பயந்த சுபாவம், வயிற்றுக் கோளாறு, கட்டுப்படுதல், பிரயாணம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

பொங்கல் கவிதைப் போட்டியில் பாராட்டுப்பெறும் கவிதைகள் பிரசுரமாகின்றன



## தைமகளே தமிழர்க்கு விடிவுதனைத் தாராயோ

குப்பிவிளக்கின் இருள் கௌவிய ஒளியாய்
இன்னல் நிறைந்த இரவல் வாழ்க்கை
இனியும் வேண்டுமோ எங்களுக்கு
இலையுதிர் காலம் வந்தது போதும்
இளவேனில் ஆவல் எழுந்தது நெஞ்சில்
புத்தொளி வீசும் புதியவளே!
வேட்டொலி நீங்கி பாட்டொலி கேட்க
தைமகளே! தமிழர்க்கு விடிவினைத்தாராயோ!

**குலசிங்கம் றஜீபன்**
ஏழாலை.

★ ★ ★

இன்னல்களின் மத்தியிலே இடர் சுமக்கும் தமிழினத்தின்
இருள் களைந்து ஒளியேற்ற வந்திடுவாய் தைமகளே
சோதனையின் விளிம்பினிலே துவண்டிருக்கும்தமிழினத்தின்
வேதனைகள் தீர்த்திங்கு தந்திடுவாய் விடிவுதனை
தமிழ் மக்கள் படுகின்ற அவலங்கள் தனை நீக்கி
கவலைகள் ஏது மற்ற விடிவு தனை தந்திடுவாய்
சண்டைசச்சரவுகள் ஒழிந்து சமாதான ஒளி பிறந்து
தமிழர்கட்கு விடிவு தனை தாராயோ தைமகளே

**பரராஜசிங்கம் சந்திரகுமார்**
யாழ்ப்பாணம்

★ ★ ★

வையத்துள் வான் புகழுடன் வாழ்ந்தோம்
வரலாற்றில் பெரும் பேருடன் வாழ்ந்தோம்
கை நிறைய திரவியம் சேர்த்தோம்
கடல் கடந்து வாணிபம் செய்தோம்
மை விழியார் மனம் மகிழ வைத்தோம்
மாங்கல்யம் புலிப்பல்லால சூடினோம்
தற்காலம் ஈழத்தில் அகதிகள் ஆனோம்
தைமகளே தமிழருக்கு விடிவு தனை தாராயோ

**தியாகராசா முத்துக்குமரன்**
நீர்வேலி

★ ★ ★

தை மகளே!
அந்தஸ்து கேட்டு
அலையவில்லை
அரியாசனத்திற்கு
ஆசைப்படவுமில்லை
நாம் கேட்பதெல்லாம்
தமிழருக்கு நிம்மதி
தருவாயே என் தைமகளே.

**ஐயாத்துரை கலாயினிதேவி**
யாழ்ப்பாணம்

★ ★ ★

எத்தனை நாள் காத்திருந்தோம்
இன்பமான விடிவுக்காய்
நித்தமும் போர் முழக்கம்
நெஞ்சினிலே கெடிக்கலக்கம்
இந்நிலைமை மாறாதோ
நன்னிலைமை வாராதோ
தைமகளே வாராயோ
விடிவுதனைத் தாராயோ

**சிந்திகா கமலச்சந்திரன்**
சுன்னாகம் மேற்கு

★ ★ ★

பூங்குயில் இசை போய் பல் குழல் இடி கேட்டோம்.
பிஞ்சு மழலை கண்ணில் நீர் பனிக்கக் கண்டோம்
தமிழன் இன்றெத்தனை தை விடிவின்றி வாழ்ந்து விட்டான்
புலம் பெயர் அவலத்தில் பகிடி வதைக் கொடூரம்
ஆண் பெண் வேறு இன்றி வன்முறை வளாகத்தில்
கன்னி மனசுகளும் கற்பழிக்கப்பட்டதிலே
காவலன் அவனின்றிப் பட்டதுயர் இனிப் போதும்
பூக்கும் தைப் பூவணங்கே வாராயோ

**சதாசிவம் தாசன்**
ஏழாலை

★ ★ ★

பெய்யென யாரும் கேட்காமல்; துன்பமழை
பெருகிப் பொழிந்திடச் சுதந்திரம் நலிந்திட
உய்யவொரு வழியுமின்றி உள்நாடு, வெளிநாடு
என்றெங்கும் வெந்தழியும் நந்தமிழர் நொந்தநிலை
நீயுதிக்கும் ஆண்டெல்லாம் நீண்டல்லோ செல்கிறது!

தை மகளே! தமிழ் மகளே! தமிழரெல்லாம் கண்மூடிப்
போய்ச்சேரும் முன்பொருக்கால் விடிவெள்ளி — காட்டாயோ!
பொழுதெல்லாம் கடுமிருட்டு விடிவுதனைத் — தாராயோ!

**குணநாயகம் சிறிகணேஷ்**
மானிப்பாய்

# செய்தித் துளிகள்

## தீமூட்டி தற்கொலை

(யாழ்ப்பாணம்)

கடந்த தைப்பொங்கல் தினத்தன்று தனக்குத்தானே தீமூட்டி தற்கொலை முயற்சியில் ஈடுபட்டு தீக்காயங்களுடன் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட குடும்பஸ்தர் கடந்த புதனன்று மரணமானார்.

பருத்தித்துறை சிவன் கோவிலடியைச் சேர்ந்த 6 பிள்ளைகளின் தந்தையான இரத்தினம் சந்திரலிங்கம் (வயது-43) என்பவரே இவ்வாறு மரணமடைந்தவராவார். (உ-104)

## 15 வீடுகள் தரைமட்டம்

(யாழ்ப்பாணம்)

ஓட்டுமடம் சந்திப்பகுதியில் இருந்த 15 வீடுகள் தரைமட்டமாக்கப்பட்டுள்ளன.

ஓட்டுமடம் சந்தியில் அமைக்கப்பட்டிருந்த இராணுவ முகாமைச் சுற்றி இருந்த 15 வீடுகள் முற்றாக தரைமட்டமாக்கப்பட்டு கற்குவியலாக காட்சி தருகிறது.

இப்பகுதியில் மூடப்பட்டிருந்த வீதி தற்போது பாவனைக்காக திறந்து விடப்பட்டுள்ளது தெரிந்ததே. (தி)

## இளைஞர் அமைப்பு

திருநெல்வேலி பகுதியில உள்ள கிராம விஸ்தரிப்புத் திட்டத்தில், இளைஞர்கள் இணைந்து புதிய இளைஞர் அமைப்பைத் தோற்றுவித்துள்ளார்கள்.

இச் சங்கமானது கிராமத்தின் முன்னேற்றத்திற்கு உதவும் வகையில் உருவாக்கப்பட்டதாக அச் சங்கத்தின் தலைவர் ந. சசி தெரிவித்தார். (உ 22)

## வலிகிழக்கில் கொடுப்பனவு

(ஆவரங்கால்)

வலி கிழக்குப் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த 63 குடும்பங்களுக்கு வீடுகள் சேதமடைந்தமைக்கான கொடுப்பனவு காசோலைகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

இவற்றில் ஜே/266 கிராம அலுவலர் பிரிவைச்சேர்ந்த 50 குடும்பங்களுக்கு முதற்கட்ட இரண்டாங்கட்டக் கொடுப்பனவுகளும், வேறு கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த குடும்பங்களுக்கான கொடுப்பனவுகளும் அடங்கும். (உ-57)

## மாதாந்த உதவிப் பணம்

(மந்திகை)

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுவோருக்கான கொடுப்பனவுகள் கடந்த செவ்வாய்க்கிழமை முதல் வழங்கப்பட்டு வருகின்றன.

உதவிப் பணம் பெறுவோர் தமது பிரிவிலுள்ள தபால், உபதபால் நிலையங்களில் எதிர்வரும் 25 ம்திகதிக்குமுன் பெற்றுக் கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-23)

## மிதிவெடிகள் செயலிழப்பு

(கொழும்பு)

இம்மாதம் 16 ஆம் திகதி மறவன்புலவு, நுணாவில் பகுதிகளில் படையினர் நடத்திய தேடுதல் நடவடிக்கையின் போது, 227 மிதிவெடிகள் இனம் காணப்பட்டுச் செயலிழக்கச் செய்யப்பட்டதாகவும்

இத்தேடுதல் நடவடிக்கையின் போது படைத்தரப்பில் ஒருவர் சிறு காயங்களுக்கு உள்ளானதாகவும் ஊடகத் தகவல் மையம் அறிவித்துள்ளது. (உ)

## நூல்கள் கொள்வனவு

(மந்திகை)

வடமராட்சி கல்வி வலய திணைக்கள முறைசாராக் கல்விப்பிரிவுக்கு சுமார் பத்தாயிரம் ரூபா பெறுமதியான நூல்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

முறைசாராக் கல்விப் பிரிவினால் நடத்தப்படும்சிறுவர் செயற்திட்டம் மற்றும் முதியோர் எழுத்தறிவூட்டல், நீதிக்கதைகள் நூல்களே இவ்வாறு கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது

இந்நூல்கள் பயிற்சிக் காலத்தின் போது ஆசிரியர்களினூடாகவழங்கப்பட்டு மாணவர்களை சென்றடைய வழிவகை செய்யப்படுமெனவும் பயிற்சிக் காலம் முடிவடைந்தவுடன் மீளப்பெறப்படுமெனவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-23)

## பொதுமக்கள் இருவர் கைது

(கொழும்பு)

ஒரு தகரம் மண்ணெண்ணெய்யும், 6தகரம்எஸ்.எ.இ 40 மோட்டார் ஒயிலும் புலிகளுக்கு விநியோகிப்பதற்காக கொண்டுசென்றார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் இரு பொதுமக்கள் கடந்த 16 ஆம் திகதி கைது செய்யப்பட்டு, மேற்படி பொருட்களுடன் மேலதிக விசாரணைகளுக்காக மன்னார் பொலிஸில் ஒப்படைக்கப்பட்டிருப்பதாக ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்துள்ளது. (உ)

## சுகாதார கல்வி நிகழ்ச்சி

(ஊர்காவற்றுறை)

மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் யாழ்ப்பாண அலுவலக ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் கீழ் உள்ள பகுதியான தம்பாட்டி கிராமத்தில் உள்ள தம்பாட்டி அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் சுகாதார கல்வி நிகழ்ச்சி ஒன்று அண்மையில் இடம்பெற்றது.

பாடசாலை மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், பொதுமக்களுக்குமாக சுகாதாரசேவைகள் திணைக்களம் டெங்கு காய்ச்சல், தொழுநோய் தொடர்பான அறிகுறிகள், அபாயங்கள், வருமுன் காப்போம் என்பதற்கிணங்கிய விடயங்கள் அடங்கிய வீடியோ படக்காட்சியுடனான கருத்துரைகள் இந் நிகழ்வில் வழங்கப்பட்டன.

மேலும் தெரிவுசெய்யப்படும் கிராமங்களில் மேற்படி நிகழ்ச்சிகள் நடத்தப்படுவதுடன் தொற்று நோய்களில் இருந்து மக்களை பாதுகாக்க நடவடிக்கையினை மேற்கொண்டுவருவதாக மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் அதிகாரிகள் தெரிவித்தனர். (உ-75)

## நிர்வாகிகள் தெரிவுக் கூட்டம்

(திருநெல்வேலி)

திருநெல்வேலி பாற் பண்ணைப் பகுதியில் அமைந்துள்ள ஸ்ரீஞான வைரவர் ஆலயத்தின் புதிய நிர்வாகிகளை தெரிவு செய்வதற்கான கூட்டம்நாளைஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு நடைபெற இருப்பதால் சகல அடியார்களையும், நலன் விரும்பிகளையும் அங்கத்தவர்களையும் கலந்து கொள்ளுமாறு நிர்வாகம் கேட்டுக் கொள்கிறது. (உ-22)

குருநாகல்,

# ஸ்ரீகதிர் வேலாயுத சுவாமி கோயிலை இடிக்க தீர்மானம்

## வீதி அபிவிருத்திகருதியாம்

(கொழும்பு)

குருநாகலில் அமைந்துள்ள ஸ்ரீ கதிர் வேலாயுத சுவாமி கோயிலின் முன்பகுதியை இடிப்பதற்கு வீதி அபிவிருத்தி அதிகாரசபை தீர்மானித்துள்ளது. குருநாகல் மாநகர அபிருத்தி திட்டத்தின் பாதை விஸ்தரிப்பு நடவடிக்கைக்கு குந்தகம் விளைவிக்கிறது என்ற அடிப்படையிலேயே இவ்இந்துஆலயம்இடிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருப்பதாய் தெரியவந்துள்ளது.

கோயிலின் பிரதான மதில் மற்றும் மகா மண்டபம் வரை பாதை விஸ்தரிப்பு வேண்டி இடிக்கும் வகையில் தற்போது அடையாளம் இடப்பட்டுள்ளது.

கோயிலின் முன்பாக பாதையை விஸ்தரிக்க செதிகள் இருந்த போதிலும் கோவிலை இடிக்குபாதையை அமைக்க முயற்சி செய்வதையிட்டு மனவேதனையுற்றுள்ள இப்பகுதி இந்துக்கள், இது விடயத்தினை இந்து சமய கலாசார விவகார அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்தின் கீழ் கொண்டுவந்துள்ளதாககூறப்படுகிறது. (உ)

## சிறைக்காவலாளி பதவி விண்ணப்ப திகதிநீடிப்பு

(யாழ்ப்பாணம்)

சிறைக்காவலாளி பதவிக்கான விண்ணப்ப நாள் இம்மாதம் 25 ஆம் திகதியுடன் முடிவடைவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, மேற்படி பதவிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் மேலதிக தகவல்களைப் பெற விரும்பின் தம்முடன் தொடர்பு கொள்ளுமாறு யாழ். சிறைச்சாலை பிரதி ஆணையாளர் எஸ் சிவசுந்தரம் தெரிவித்துள்ளார்.

தமிழ், கணிதம் உட்பட ஏதாவது 4 பாடங்களில் சித்தியடைந்த 18 வயதிற்கும் 45 வயதிற்கும் இடைப்பட்டவர்கள் இப்பதவிக்கு விண்ணப்பிக்க முடியும் என வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப்பட்டிருந்தமை தெரிந்ததே (உ-12)

## நான்குபேர் சுட்டுக்கொலை

(கொழும்பு)

பொறளைமகசீன் சிறைச் சாலைக்கு அருகே வீதியில் நின்ற நால்வர் வானில்வந்த இனம் தெரியாத கோஷ்டியினரால் சுட்டு கொல்லப் பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற இச் சம்பவத்தில் வானில்வந்தஇந்த கோஷ்டியினர் சரமாரியாகதுப்பாக்கிப் பிரயோகம்செய்துவிட்டுவெல்லம்பிட்டிபகுதிநோக்கிதப்பிச் சென்றதாகவும் இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை பொறளை பொலிஸார் மேற்கொண்டுவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது (ந-5)

## பனைஅபிவிருத்தி சபையின் பனங்களி பற்பசையை அறிய பிரான்ஸ் நாட்டம்

(யாழ்ப்பாணம்)

பிரான்ஸ் நாட்டு மருந்து உற்பத்தி நிறுவனம் ஒன்று பனை அபிவிருத்திச்சபையின் யாழ் தலைமையகத் திடம் தொழில்நுட்ப உதவி களைக் கோரியுள்ளது.

பனம் களியில் இருந்துபனை அபிவிருத்திச் சபையால் புதிதாக கண்டு பிடிக்கப்பட்ட நுண் கிருமிஎதிரி மற்றும் பற்பசை போன்ற உற்பத்திகள் தொடர்பாக சர்வதேச பத்திரிகை ஒன்று விபரமாக எழுதியிருப்பதை தொடர்ந்தே அது தொடர்பான முழுத்தகவல்களையும் அறிந்து கொள்ளும் வகையில மேற்படி பிரான்ஸ் நாட்டு மருந்து உற்பத்தி நிறுவனம் கடித மூலம் தொழில்நுட்பஉதவி கோரியிருப்பதாகதெரியவந்துள்ளது.

இதுவிடயம் தொடர்பாக யாழ் தலைமையகம் சாதகமான கடிதம் ஒன்றினை அனுப்பியிருப்பதாகவும், அந் நிறுவனத்திற்கு தொழிநுட்ப உதவிகளை வழங்குவதன் மூலம் யாழ்ப்பாணத்தில் இருந்து பனம் களியினை பிரான்ஸ் நாட்டிற்கு ஏற்றுமதி செய்யக்கூடிய வாய்ப்பு உள்ளதாகவும் பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் மு.பாக்கியநாதன் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் மகா நாட்டில் தெரிவித்துள்ளார், (உ-12)

## யுனிசெப் உதவியுடன் போஷாக்கு கருத்துரை தீவகத்தில் நடைமுறை

(ஊர்காவற்றுறை)

யுனிசெப் நிறுவனத்தின் உதவியுடன் ஊர்காவற்றுறை சுகாதார வைத்தியஅதிகாரி பணிமனை உத்தியோகத்தர்களால் கற்பவதிக்கான தாய் சேய் நலன், போசாக்கு பற்றிய கலந்துரையாடல் நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றது.

ஊர்காவற்றுறை சுகாதார வைத்தியஅதிகாரி பணிமனையின் கீழ் உள்ள பகுதிகளில் வசிக்கின்ற கற்பவதிகளுக்கே 'தாய் சேய்நலனும் போசாக்கும்' என்ற தலைப்பில் கலந்துரையாடல்மூலம் விழிப்புணர்ச்சி ஏற்படுத்தப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது

அந்தவகையில் தற்பொழுது நயினாதீவு, ஊர்காவற்றுறை, வேலணை, நெடுந்தீவு ஆகிய இடங்களில் மேற்படி நிகழ்ச்சிகள் இடம்பெற்று முடிந்துள்ளதாகவும் தொடர்ந்து புங்குடுதீவு, அல்லைப்பிட்டி, காரைநகர், எழுவைதீவு, அனலை தீவு ஆகிய இடங்களில் இந்நிகழ்வினை நடத்துவதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாகவும் ஊர்காவற்றுறை சுகாதார வைத்தியஅதிகாரி பணிமனையின் பொறுப்பதிகாரி ச. திவ்வியகுமாரன் தெரிவித்தார். (உ-75)

## ஒன்றுகூடலும் பிரிவுபசாரமும்

(மந்திகை)

வடமராட்சிதெற்குமேற்கு பிரதேச செயலக உத்தியோகத்தர் நலன்புரிச்சங்கம் நடத்தும் பிரிவுபசார வைபவமும் வருட இறுதி ஒன்றுகூடல் விழாவும் எதிர்வரும் 24ஆம் திகதி புதன்கிழமை பிரதேச செயலர் எஸ்.ஸ்ரீநிவாசன் தலைமையில் நடைபெறும்.

அன்றுகாலை 7.மணிக்கு செயலசமாநாட்டுமண்டபத்தில் ஓய்வுபெற்றுள்ள நிதி உதவியாளர் கி.தர்மரட்ணம் கிராமசேவையாளர்கள் பொ.கணேசு,செ. சிவசம்பு ஆகியோருடைய பிரிவுபசார வைபவமும்முப 11.30 மணிக்கு சமுர்த்தி வலயம் இரண்டின் வருட இறுதி ஒன்றுகூடலும் நடைபெறும்.. (உ-23)

## நிர்வாகிகள் தெரிவு

பருத்தித்துறை கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த பொதுக் கூட்டமும் நிர்வாகி தெரிவும் அண்மையில் நடைபெற்றது.

இவ்வருடத்திற்கான தலைவராக பா ஜெயரூபனும் செயலாளராக அ. அற்புதரஞ்சனும் பொருளாளராக இ. முகுந்தனும் தெரிவுசெய்பட்டுள்ளனர். (உ-23)

## க.பொ த (சா-த)மாணவர்கள் சுகாதாரமும் உடற்கல்வியும் பாடத்தில் தோற்ற முடியும்

(கொழும்பு)

இவ்வாண்டு கல்விப் பொது தராதரப் பத்திர சாதாரண தரப் பரீட்சைக்கு சுகாதாரமும் உடற்கல்வியும் ஒருபாடமாக சேர்த்துக் கொளளப்படவுள்ளது. கடந்த 1998 ஆண்டு தொடக்கம் சுகாதாரம் உடற்கல் விதனித்தனிப் பாடங்களாக இருந்தது தற்போதுஇதனை ஓரே பாடமாக்கபரீட்சைத்திணைக்களம் தீர்மானித்துள்ளது (வி)

வவுனியா கட்டுப்பாட்டு பகுதிக்கு

## ஆசிய அபிவிருத்தி வங்கி 500 மில்லியன் நிதியுதவி

(வவுனியா)

இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதிகளுள் உள்ள வவுனியா பிரதேசத்திற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி,500 மில்லியன் ரூபாவை அதன் அபிவிருத்திக்கு ஒதுக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிதி உதவிசுகாதாரவ கல்விபோன்ற தேவைகளுக்கே பெரும்பாலும் பயன் படுத்தப்படவுள்ளது.

500 மில்லியன் ரூபாவை ஆசியஅபிவிருத்தி வங்கிவழங்குவது தொடர்பாக ஆராய்வதற்கு 'ஆறு பேர் அடங்கிய குழு ஒன்று நியமித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வ)

## இன்று ஒரு தகவல்

### மருத்துவரின் மன இறுக்கம்

என்னோடு படித்த ஒருவர் டாக்டர் ஆக இருக்கிறார். அவரைப் பார்க்கப் போன சமயம் எனக்கு உடம்பு நன்றாக இருக்கவில்லை உடம்பு வலிக்கு ஏதாவது மாத்திரை கொடுக்குமாறு கேட்டேன். உடனே அவர் மூட்டுக்குமூட்டு வலி கொஞ்சம் அதிகமாக இருக்கிறதா என்றார். ஆம் என்றேன். காலையில் படுக்கை விட்டு எழும் போது தலைசுற்றுகிற மாதிரி இருக்கிறதா? என்றார். ஆம் என்றேன். சாப்பாட்டைப் பார்த்தாலே அது வேண்டாம் என்று தோன்றுகிறதா? என்றார். அதற்கும் ஆம் என்றேன். நீங்கள் சொல்வதெல்லாம் சரி எப்படி இவ்வளவு நுணுக்கமாகக் கண்டுபிடிக்க முடிந்தது என்று கேட்டேன்.

வேறு ஒன்றுமில்லை. அதே குணங்கள் எனக்கும் இப்போது இருந்து கொண்டிருக்கிறது. அதுதான் அவ்வளவு சரியாகச் சொல்ல முடிந்தது என்று சொல்லிக் கொண்டே நாலு மாத்திரைகளை எடுத்து வந்து என்னிடம் இரண்டைத் தந்து விட்டுத் தானும் இரண்டைச் சாப்பிட்டுத் தண்ணீரைக் குடித்தார்.

டாக்டர் என்பதால் வியாதிகள் விலகிப் போய் விடுவதில்லை. அவர்களுக்கு ஏற்படுகிற மன இறுக்கம் பல சமயங்களில் அவர்களின் ஆரோக்கியத்தையே பாதிக்கிறது இதைப் பற்றி வெளிநாடுகளில் சில ஆராய்ச்சிகள் நடக்கின்றன. இங்கிலாந்தில் ஒரு புள்ளிவிபரம் எடுத்த போது, அங்கு பொது மக்களை விட, டாக்டர்களிடம் தான் தற்கொலை விகிதம் அதிகமாக இருக்கிறதாம். மதுவினால் கல்லீரல் அழற்சி ஏற்படுகிற விகிதமும் அதிகமாம் மன இறுக்கம் தான் உடல்நலம் கெடுவதற்கு முக்கிய காரணமாக இருக்கிறது.

விளம்பர நிறுவனங்களில் வேலை செய்பவர்கள், பத்திரிகைக்காரர்கள், பொலிஸ் அதிகாரிகள், விமானிகள் ஆகியோருக்கு அடுத்த படியாக மன இறுக்கத்திற்கு ஆளாகிறவர்கள் டாக்டர்கள் தானாம், சாகக்கிடக்கிற நோயாளியைப் பிழைக்க வைக்க வேண்டுமென்பதற்காக சாப்பாட்டை மறந்து, இரவு முழுவதும் கண்விழித்து உட்கார்ந்து இருக்க வேண்டியிருக்கிறது பாதி இரவில் வந்து கதவைத் தட்டி அங்கே ஒருத்தர் உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கிறார். உடனே புறப்படுங்கள் என்பார்கள். நடு இரவில் தொலைபேசியில் வயிற்றை வலிக்கிறது, என்ன செய்யலாம் என்று கேட்பார்கள் டாக்டரும் அவசரத்திற்கு இரண்டு ஆஸ்பிரின் மாத்திரையைச் சாப்பிட்டு விட்டுத் தூங்குங்கள். காலையில் பார்த்துக் கொள்ளலாம் என்று தொலைபேசியில் பதில் சொல்வார் நோயுற்ற அவரும் இரண்டு மாத்திரையைச் சாப்பிட்டு விட்டு நிம்மதியாகத் தூங்கி விடுவார்.

ஆனால் டாக்டருக்குத் தூக்கம் வராது. அந்த ஆள் வயிற்றை வலிக்கிறது என்று சொன்னாரே, ஏதாவது கட்டியாயிருக்குமோ? அல்லது வேறு ஏதாவது கோளாறா? அஸ்பிரின் ஏதாவது ஆபத்தை உண்டாக்கி விடுமோ? என்று நினைத்துக் கவலைப்பட்டுக் கொண்டு தூங்காமலிருப்பார். அப்படியிருக்கும் போது மன இறுக்கம் (Tension) வராமலிருக்குமா ?

தென்கச்சிகோ. சுவாமிநாதன்

# இடர்கால கொடுப்பனவு கோரி

# வேலை நிறுத்தப் போராட்டம்

## வடக்கு - கிழக்கு தாதிமார் ஈடுபடுவர்

(யாழ்ப்பாணம்)

இடர்கால கொடுப்பனவு தொடர்பாக வடக்கு-கிழக்கு தாதிமார், வரும் பெப்ரவரி முதல் வாரமளவில் தொடர்ச்சியான வேலை நிறுத்தப் போராட்டம் ஒன்றில் குதிக்க முடிவு செய்துள்ளனர்.

இம்மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் தங்கள் கோரிக்கைக்கு சுகாதார அமைச்சு தீர்வு தராவிடின் வரும் மாதம் வேலை நிறுத்தத்தில் குதிக்கப் போவதாக ஐக்கிய தாதிமார் சங்கம் தெரிவித்துள்ளது.

வடகிழக்கில் பணியாற்றும் 560 தாதிமாருக்கும் கடந்த வருடம் ஜூலை மாதம் இடர்கால கொடுப்பனவு எதுவும் வழங்கவில்லை எனவும் இதனை நிலுவையுடன் சேர்த்து வழங்குமாறும் இச்சங்கம் சுகாதார அமைச்சைக் கோரி உள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-தி)

## மேலதிகமாக ஆயிரம் ரூபா

(கொழும்பு)

ஆசிரிய ஆலோசகர்களுக்கு மாத மொன்றுக்கு மேலதிகபடியாக ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது.

மாதாந்தம் 10 பாடசாலைகளுக்கு கடமை விஜயம் மேற்கொண்டால் மாத்திரமே ஆசிரிய ஆலோசகர்கள் மேலதிக கொடுப்பனவான ஆயிரம் ரூபாவைப் பெற்றுக் கொள்ள முடியும் என கல்வியமைச்சு அறிவித்துள்ளது

இதில் ஒரு நாள் குறைந்தாலும் அக்கொடுப்பனவு 500 ரூபாவாக குறைக்கப்படும் என்று மேலும் தெரிவிற்கப்பட்டுள்ளது (உ)

## தீயணைப்பு சேவை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபையின் தீயணைப்புப் படையின் செயற்பாடுகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

1980 ஆம் ஆண்டு கனேடிய அரசின் உதவியுடன் ஆரம்பிக்கப்பட்ட இப்பிரிவு கடந்த சில வருடங்களாக செயற்பாடுகள் பாதிக்கப்பட்டு இருந்தமைதெரிந்ததே.

தற்போது கனேடிய அரசு 30 இலட்சம் ரூபாவை வழங்கியமையை அடுத்து இதன் செயற்பாடுகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

(தி)

பட்டினிக்கெதிரான நிறுவனம்

## வழங்கிய மரக்கறி விதை முளைதிறன் குறைந்தவை

### கோப்பாய் விவசாயிகள் கவலை

(கோப்பாய்)

பட்டினிக்கு எதிரான நிறுவனத்தினால் கோப்பாய் பகுதி விவசாயிகட்கு வழங்கப்பட்ட மரக்கறி விதை இனங்கள் விற்பனைக்கேற்ற நல்ல இனங்களல்ல என சம்பந்தப்பட்ட விவசாயிகளால் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் இலவசமாக வழங்கப்பட்ட பாகல், பயற்றை, வெண்டி, புடோல் பூசினி போன்ற, மறக்கறி விதைகளை மிகவும் ஊக்கமுடன் பயிர் செய்த விவசாயிகளே இவ்வாறு கவலை தெரிவித்துள்ளனர்.

மேற்படி விதைகளின் பலனை சந்தைப்படுத்தும் போது அவற்றை கொள்வனவு செய்வத்றகு பொது மக்கள் பின்னடிப்பதாகவும்,

இவ்வாறு விதைகள் வழங்கும் போது அவை நல்லின விதைகளா என்பதை உறுதிப்படுத்திய பின்பு வழங்க நடவடிக்கை எடுத்தால் விவசாயிகளின் வீண் சிரமங்களைப் போக்க இயலுமெனவும் கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-79)

## மலசல கூடத்தில் இருந்து சுயவிபரக் கோவைகள் மீட்பு

### பளைக் கல்விக்கோட்டத்தை சேர்ந்ததாம்

(துன்னாலை)

தென்மராட்சி வலயக்கல்வி திணைக்கள ஆசிரியர் பலரது சுயவிபரக் கோவைகள் மலசல கூடத்தில் இருந்து மீட்டு வரப்பட்டதாய் தெரியவந்துள்ளது.

கடந்த வெள்ளியன்று தமது ஆவணங்களை மீட்கும் வகையில் இரண்டாவது தடவையாக சாவகச்சேரி சென்ற வலயக் கல்விப் பணிப்பாளர் தலைமையிலான குழுவே இவ்வாறு குப்பைகூழங்கள் நிரம்பிய மலசலகூடத்தில் இருந்து மேற்படி சுயவிபரக் கோவைகளை மீட்டுவந்தனர்.

பளைக் கல்விக்கோட்டத்தைச்சேர்ந்த 100 இற்கும் மேற்பட்ட ஆசிரியர்களது சுயவிபரக் கோவைகளே இவ்வாறு சேதமடைந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளன.

அதேவேளை திணைக்களத்தின் நிதிக்கிளையில் இருந்து கொடுப்பனவுப் பேரேடுகள் கொடுப்பனவு தொடர்பான ஆவணங்கள் என்பன சேதமடைந்த நிலையில் மீட்டு வரப்பட்டுள்ளதாயும் தென்மராட்சி வலய கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா தெரிவித்துள்ளார். (உ-41)

பனை அபிவிருத்திச் சபை

# ஆராய்ச்சி அபிவிருத்திக்கென பெருமளவு நிதிஒதுக்கீடுசெய்துள்ளது

## தலைவர் பாக்கியநாதன் தகவல்

(யாழ்ப்பாணம்)

பனை அபிவிருத்திச் சபைக்கு இவ்வாண்டு, மூலதன நிதியில் இருந்து ஒதுக்கப்பட்ட 23 மில்லியன் ரூபாயில், பெரும் பகுதி ஆராய்ச்சி அபிவிருத்திக்கென ஒதுக்கப்பட்டுள்ளதாக பனை அபிவிருத்திச்சபைத் தலைவர் மு பாக்கியநாதன் தெரிவித்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை பனை அபிவிருத்திச் சபையின் யாழ்.தலைமை அலுவலகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் மேற்கண்டதகவலை வெளியிட்ட பாக்கியநாதன் தொடர்ந்து கூறுகையில்,

பனை அபிவிருத்திச் சபைக்கென ஒதுக்கப்பட்ட நிதி மூலம் தம்மால் வகுக்கப்பட்ட திட்டங்களை ஜனாதிபதியின் பார்வைக்கு முன்வைத்த போது, நல்ல பாராட்டு கிடைத்ததாகவும், அடைக்கப்பட்ட கள்ளினை கொழும்பில் விற்பதற்கும் நடவடிக்கை எடுக்குமாறு ஆலோசனை கூறியதுடன், அதற்கான கருவிகள் கொள்வனவு செய்வதற்கென 3 மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்ததாகவும் குறிப்பிட்டார்.

எமது திட்டத்தின்படி நாள் ஒன்றுக்கு 2 ஆயிரத்து 780 போத்தல் சாராயம் உற்பத்தி செய்யப்படவுள்ளது.

வெகு விரைவில் ஒரு வருடம் பழமை வாய்ந்த சாராயம் உற்பத்தி செய்து வெளியிடப்படவுள்ளதாகவும்.

தம்மால் தற்போது முன் எடுக்கப்பட்டுள்ள திட்டங்கள் சீவல் தொழிலாளர்களின் வாழ்வை மேம்படுத்த வல்லவை என்றும் தெரிவித்தார். (உ-12)

## ஊரின் நலன் கருதி, உடுவில் கிழக்கில் இறுக்கமானநடைமுறைகள்

[இணுவில்]

தமது கிராமத்தின் நன்மையை கருத்திற்கொண்டும், நிலவும் சீரழிவு நிலையைப் போக்கும் பொருட்டும் உடுவில் கிழக்கு அண்ணா சன சமூக நிலையத்தினரும் அப்பகுதி பிரஜைகள் குழுவும் இணைந்து இறுக்கமான நடைமுறைகளை அறிவித்துள்ளன.

இந்த வகையில், கசிப்பு காய்ச்சுதல், அதனை விற்பனைசெய்தல், சட்டவிரோத மின்சாரம் பெறுதல் அனுமதி இன்றி திரைப்படம் காட்டுதல், வீதியில் நின்று அரட்டை அடித்தல், பெண்கள் மீது சேட்டை விடுதல், வீண் சண்டை சச்சரவுகளில் ஈடுபடுதல் என்பன சம்பந்தப்பட்ட பகுதியில் இம் மாதம் 15ஆம் திகதி முதல் தடை செய்யப்பட்டுள்ளன.

இது குறித்த தகவல் சன சமூக நிலையத்தின் அறிவிப்புப் பலகையில் ஒட்டப்பட்டிருப்பதுடன், துண்டுப்பிரசுரமும் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

இதேசமயம், சனசமூக நிலைய இளைஞர்களின் முன்மாதிரியான நடவடிக்கைக்கு அறிவுஜீவிகள் மட்டத்தில் இருந்து பலத்த வரவேற்புக் கிடைத்துள்ளதுடன், அனைத்துச் சனசமூக நிலையங்களும் இவ்வாறு சமூக நலன்பேணும் நடைமுறைகளை கைக்கொள்ள வேண்டும் எனும் எதிர்பார்ப்பும் வெளியிடப்பட்டுள்ளது. [உ-49]

## நாட்டிய நாடகம்

(கொழும்பு)

கண்ணகி காவியத்தினை நாட்டிய நாடகமாக நாடு முழுவதும் அரங்கேற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அரசினது நாட்டியக் குழுவினைக் கொண்டு கண்ணகியின் காவியத்தை இசையுடன் கூடிய நாட்டிய நாடகமாக்கி நாட்டு மக்கள் சகலருக்கும் காண்பிக்க வேண்டும் என்று கலாசார அமைச்சர் மொன்டி கொபல்லாப தெரிவித்துள்ளார். (தி)

## தம்பி இறந்த சோகம்

### அண்ணன் தற்கொலை முயற்சி

(மந்திகை)

தம்பி இறந்த சோகம் தாங்காத சகோதரன் தானும் தற்கொலை முயற்சியில் ஈடுபட்ட வேளையில் காப்பாற்றப்பட்டு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பாடசாலை வீதி வியாபாரி மூலையைச் சேர்ந்த வேலாயுதம் அமலன் (வயது-18) என்ற இளைஞரே இவ்வாறு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவராவார்.

மேற்படி இளைஞரது 5 வயதான சகோதரன் சுகவீனம் காரணமாக யாழ். போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட வேளை மரணமடைந்தார் என்றும்,

இதனையறிந்து மனம் மிக வருந்தி நஞ்சருந்தி தற்கொலை முயற்சியில் ஈடுபட்டாரென்றும் தெரியவந்துள்ளது. (உ-23)

## திட்ட அலுவலர்க்கு பதவி உயர்வு

(கொழும்பு)

வடக்கு கிழக்கில் திட்ட அலுவலர்களாக கடமையாற்றுவோர் அனைவரும் திட்டமிடல் உதவிப் பணிப்பாளர்களாக பதவி உயர்த்தப்படவுள்ளனர்.

இது தொடர்பாக சுமார் 55 திட்ட அலுவலர்களும் அமைச்சுக்கு உள்வாங்கப்பட்டு திட்டமிடல் சேவையின் பதரம் 2 வகுப்பு 2 இற்கு பதவி உயர்த்தப்பட்டு திட்டமிடல் உதவிப்பணிப்பாளர்களாகநியமனம்வழங்கநடவடிக்கைஎடுக்கப்பட்டுள்ளதாகதிட்டம் செயற்படுத்தல் அமைச்சு தெரிவித்துள்ளது, (தி)

## வீதியில் மோதல்

(மந்திகை)

வல்வெட்டி உடுப்பிட்டி வீதியால் நடந்து சென்றவர் எதிரே வந்த துவிச்சக்கர வண்டியில் மோதுண்டு காதுப் பகுதியில் பலத்த காயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கொற்றாவத்தையைச் சேர்ந்த மாணிக்கம் செல்வராசா (வயது 62) என்பவரே இவ்வாறு சிகிச்சை பெற்று வருகிறார். (உ-23)

# விளையாட்டு அரங்கு

## இலங்கை அணி வெற்றி பெற்றது

தென்னாபிரிக்காவுக்கு எதிரான ஆறாவது சர்வதேச ஒரு நாள் போட்டியில் இலங்கை அணி 6 ஓட்டங்களால் வெற்றிபெற்றுள்ளது.

நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்கா இலங்கையை முதலில் துடுப்பாடப் பணித்தது. மழைகாரணமாக பந்துப்பரி மாற்றங்கள் 46 ஆக குறைக்கப்பட்டது. 42 பந்துப் பரிமாற்ற முடிவில் 6 விக்கெட்டுகளை இழந்த இலங்கை அணி 214 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்காடிய தென் ஆபிரிக்க அணி 208 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. (த-22)

## சுசந்திகாவுக்கு கிடைத்த பரிசு

குறுந்தூர ஓட்ட வீரங்கனை சுசந்திகா சிட்னி ஒலிம்பிக்கில் வெண்கல பதக்கம் பெற்றமையை பாராட்டி ஜனாதிபதியினால் கொழும்பை அண்டிய பிரதேசத்தில் 10 பேர்ச் காணி அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் 50 இலட்சம் ரூபா பணமும் வழங்கப்பட்டது.

## அவுஸ்ரேலியா முன்னிலையில்

2000 ஆம் ஆண்டு நடைபெற்ற டெஸ்ட் போட்டிகளில் 8 இனை வெற்றி பெற்றதன்மூலம் அவுஸ்திரேலிய அணி முன்னிலையில் நிற்கிறது. (தி)

# மத்திய சிங்கப்பூரில் நிலநடுக்கம் பாதிப்புகள் அவ்வளவு இல்லை

(சிங்கப்பூர்)

சிங்கப்பூர் மத்திய பகுதியில் நேற்று முன் தினம் நில நடுக்கம் ஏற்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

பாரிய பாதிப்புகள் எதுவும் இடம் பெறவில்லையென்றும் கட்டடங்களில் சிறுசிறு வெடிப்புகள் தென்பட்டதாகவும் பொறியியலாளர்களும் தொழில் நுட்ப வியலாளர்களும் விரைந்து சென்று திருத்தங்களை மேற்கொண்டதாகவும்.

பூமி அதிர்வு தொடர்பாக அவதான நிலையத்திற்கு இருபத்து மூன்று தொலைபேசி அழைப்புகள் வந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை இந்த நில நடுக்கத்தால் சிங்கப்பூர் மக்கள் பீதியடைந்திருந்தனரென்றும் தெரிவிக்கப்படுகிறது.

சிங்கப்பூரில் ஏற்பட்ட நில அதிர்வு சுமத்திராவிற்கு ஆறுநூறு கிலோ மீற்றர் தொலைவில் மையங் கொண்டிருந்த நில நடுக்க விளைவே என்று குறிப்பிடப்படுகிறது.

இங்கு நில நடுக்கம் 6.4 றிச் அளவு கோலில் காட்டப்பட்டதாகவும் சுட்டிக் காட்டப்படுகிறது. (து)

## உலக தரிசன அறிவுப் போட்டி இல. 6

முழுப் பெயர்; ..................—..................—

முகவரி; ....................................

......— — — — — — — — — — — —

பிறந்த திகதி: — — — — — — — — — —

போட்டியாளர் கையொப்பம் — — — — — — — — — —

— — — — — — — — — — — — — — — —

பெற்ற புள்ளிகள்: — — — — — — — —

10ம் திகதி 'வலம்புரி'யில் வெளியான உலகதரிசன அறிவுப் போட்டி - 06 வினாக்களுக்குரியவிடைகளுடன் மேல்க்காணும் கூப்பனை இணைத்து அனுப்புதல் வேண்டும்.

# தமிழக தேர்தலில் எக்கட்சியும் பெரும் பான்மை பெறாது

(சென்னை)

அடுத்துவரும் தமிழக சட்டசபைத்தேர்தலில்எந்தஒரு கட்சிக்கும்தனிப் பெரும்பான்மை இடங்கள் கிடைக்காதென்று ஜனதாதள் தலைவர் சுப்பிரமணியசுவாமி தெரிவித்தார்.

தமிழ் நாட்டில்திராவிடமுன்னேற்றக்கழகம் அணியைச் சேர்ந்த கட்சிகளும், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஜெயலலிதா அணிக் கட்சிகளும் தமிழக மாநில காங்கிரஸ் போன்ற கட்சிகளும் தனித்தனி போட்டியில் குதிக்க இருப்பதால் எந்தக் கட்சிக்கும் அறுதிப் பெரும்பான்மைகிட்டுவது அரிது என்றும் ஆட்சி அமைப்பது சிரமம் என்றும் சுப்பிரமணியசுவாமி தெரிவித்தார். (து)

# இந்தியா பாதுகாப்புக்காக ஏவுகணையைப் பரீட்சித்தது

(புதுடில்லி)

இந்தியாவின் பாதுகாப்புக்காகவே அக்கினி இரண்டு ஏவுகணையைப் பரீட்சித்தோம் என்று பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ச் பெர்னாண்டஸ் தெரிவித்தார்.

நாங்கள் பரீட்சித்த இந்த ஏவுகணையால் ஆசியாவில் ஆயுதக் கலாசாரம் உருவாக மாட்டாதுஎன்றும்அவர் தெரிவித்தார்.

இதேவேளை இந்த ஏவுகணையால் பிராந்தியப்பாதுகாப்புக்கு பங்கம் ஏற்படும் என்றும் அயல் நாடுகளுக்கு பாதிப்பு ஏற்படுமென்றும் சீனாகருதுவதை இந்திய பாதுகாப்பு அமைச்சர் நிராகரித்துள்ளார்.

இதற்கிடையில் பாகிஸ்தான் இராணுவ ஆட்சியாளர் முஷாரப் கருத்துத்தெரிவிக்கையில் இந்திய பாகிஸ்தான் சமாதான பேச்சுகளுக்கு இந்த ஏவுகணைப் பரீட்சை பாதிப்பை ஏற்படுத்தாதென்றும் தெரிவித்தார். (து)

## செய்திப்பரல்

★ ஆபிரிக்க நாடுகள் அணி சேரா நாடுகளில் இருந்து விலக வேண்டும என ஐக்கிய நாடுகள் சபைக்கான அமெரிக்க தூதுவர் கேட்டுள்ளார்.

★ 2500 கிலோ மீற்றர் செல்லக்கூடிய இந்தியாவின் ''அக்னி-2'' ஏவுகணைப் பரிசோதனை நேற்று முன்தினம் நடத்தப்பட்டது.

★ சிம்பாவேயின் கிராமப்புற தேர்தல் தொகுதியில் நடைபெற்ற இடைத் தேர்தலில் ஜனாதிபதிமுகாபேயின் கட்சி வெற்றி பெற்றுள்ளது.

★ யுத்தக் குற்றவாளியாக ஒரு போதும் தாம் ஐ.நா. நீதிமன்றத்தில் சரணடையப் போவதில்லை என சேர்பிய ஜனாதிபதிமிலான் பிலுடினோவிக் தெரிவித்துள்ளார்.

★ கிளின்டனுக்கு முதுகுத் தோலில் காணப்பட்ட புற்று நோய் அறிகுறிகளை டாக்டர்கள் அகற்றி உள்ளனர்.

★ ஏழு சீர்திருத்த வாதிகளை சிறை வைத்திருக்கும் ஈரானின் செயலை கனடா கண்டித்திருக்கிறது? (தி)

# கொங்கோவில் வெளிநாட்டு தூதுவர்களை அதிபர்ஜோசேப்சந்தித்தார்

(கொங்கோ)

தந்தையின் மரணத்தின் பின் முதன் முறையாக ஜோசெப் கபிலா வெளிநாடுகளின் தூதுவர்களை அழைத்து பேச்சு நடத்தியுள்ளார்.

இந்தப் பேச்சுகளின் போது நாட்டில் உள்ள புதிய நிலைகள் பற்றி எடுத்துக் கூறப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நீண்ட நேரம் நடந்த இக் கூட்டத்தில் தந்தை லொறென்ஸ் கபிலாவின் மரணம் பற்றி எதுவும் பேசவில்லையென்று சொல்லப்படுகிறது.

இதேவேளை கொங்கோ நாட்டு அதிபர் லொறென்ஸ் கபிலாவின் மரணம் குறித்து ஐக்கியநாடுகள் சபை பொதுச் செயலர் கோபிஅனன் உட்பட பல நாட்டு அரசியல் தலைவர்கள் தங்கள் அனுதாபங்களை கொங்கோவிற்கு அனுப்பிய வண்ணம் இருக்கிறார்கள்.

கொங்கோ அதிபரின் மரணம் குறித்து உலக நாடுகளிடையே சந்தேகங்கள் நிலவுவதாக அரசியல் அவதானிகள் கூறுகின்றனர். (து)

# உலக எய்ட்ஸ் நோயாளர் பெருக்கத்தில் இந்தியா இரண்டாம்இடம்

(வாஷிங்டன்)

உலகம் முழுவதையும் ஆக்கிரமித்து வரும் எய்ட்ஸ் நோயில் இந்தியா இரண்டாவது நிலையில் உள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் எய்ட்ஸ் நோய் பிரிவு மற்றும் உலக சுகாதார அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கை தெரிவிக்கிறது.

உலக எய்ட்ஸ் நோயாளர்களின் எண்ணிக்கை 3 கோடியே 61 இலட்சத்தினை எட்டிய நிலையில் 38 இலட்சம் எய்ட்ஸ் நோயாளர்களை கொண்ட தென்னாபிரிக்கா 1 ஆம் இடத்திலும் 37 இலட்சம் எய்ட்ஸ் நோயாளர்களைக் கொண்ட இந்தியா 2ஆம் இடத்திலும் நிற்கின்றது.

கடந்த வருடத்தில் மட்டும் 5 வயதுக்குட்பட்ட 6 இலட்சம் சிறுவர்கள் நோய் கிருமிகளால்பாதிகப்பட்டுள்ள அதே வேளை 5 இலட்சம் சிறுவர் உட்பட 43 இலட்சம் பேர் உயிரிழந்திருக்கிறார்கள். 1 கோடியே 60 இலட்சம் பெண்கள் இந் நோயின் பாதிப்பிற்குள்ளாகி இருப்பதாகவும் அவ் அறிக்கை மேலும் தெரிவிக்கிறது. (தி)

# உச்சநிலைப் பேச்சுகளை ரஷ்யாவும் ஜப்பானும் தள்ளிவைப்பு

(ரோக்கியோ)

ஜப்பானும் ரஷ்யாவும் தங்களுக்கிடையேயான உச்ச நிலைப்பேச்சுகளை வரும் மார்ச் மாதம்வரை தள்ளிப் போட்டிருப்பதாக அறிவிக்கின்றன.

உடன்பாடு காணாத எல்லைத்தகராறுகள் நீளுவதாகவும் ரஷ்ய ஜப்பான் அதிகாரிகளுக்கிடையில் இதற்குசபரசவழி காணப்படவில்லையென்றும் இதனால் தான் ரஷ்யா உச்ச நிலைப் பேச்சுகளைபின்போட வேண்டும் என்றும் ஜப்பானிய பிரதமர் ஜெஸிரோ மோறி தெரிவித்தார்.

அதிகாரிகள் நிலைபேச்சுகளில் சமரசம் காணும் பட்சத்தில் உச்சிநிலைப் பேச்சில் ரஷ்ய அதிபர் விளாடிமிர் புட்டினும் ஜப்பானிய பிரதமர் ஜெஸிரோ மோரியும் கலந்துகொள்வார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (து)

# ஆயுதப் போட்டியில் இந்தியாவும்பாகிஸ்தானும் சீனா சாடல்

(பீஜிங்)

இந்தியாவும் பாகிஸ்தானும் ஆயுதப் போட்டியில் இறங்குவதையிட்டு சீனா எச்சரிக்கை விடுத்துள்ளது.

சீன வெளியுறவு அமைச்சின் அதிகாரியொருவர் மேற்படி எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

இந்தியா அக்கினி இரண்டு ஏவுகணையை நேற்று முன் தினம் ஏவிப் பரீட்சித்ததற்காக எச்சரிக்கை விட்டதாக தெரிவிக்காதபோதும் இந்தியாவும் பாகிஸ்தானும் எல்லைப் புறங்களில் முறுகல் நிலையில் இருப்பதைக் கண்டே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

சீன அதிகாரி மேலும் கூறுகையில் தென் ஆசியாவில் அமைதியும் சமாதானமும் பேணப்பட்டு வருகின்ற இவ் வேளையில் இந்தியாவும் பாகிஸ்தானும் ஒன்றையொன்று அடித்துக் கொள்ளும் நிலை ஏற்படக்கூடாதென்று அவர் எச்சரித்தார். (து)

## தேர்தலில் போட்டியிடத் தடை

(புதுடில்லி)

இரண்டு ஆண்டுகள் சிறைத் தண்டனை பெற்றவர்கள் தேர்தலில் நிற்கமுடியாதென்று இந்திய தலைமைத் தேர்தல் ஆணையர் தெரிவித்தார்.

தொலைக் காட்சிக்கு பேட்டி கொடுக்கையில் தலைமை தேர்தல் ஆணையர் ஹில் மேற்கண்டவாறு தெரிவித்தார். (து)

## இந்திய குடியரசுதினத்தில் அல்ஜீரியா அதிபர்

(புதுடில்லி)

இந்தியாவில் இவ்வாண்டு நடைபெறும் குடியரசுதின விழாவில் வெளிநாட்டு பிரதம அதிதியாக அல்ஜீரியாவின் அதிபர் அப்துல் அஸீஸ் கலந்துகொள்ள இருக்கிறார்.

பற்றற்ற கண்ணும் பழைமை பாராட்டுதல்
சுற்றத்தார் கண்ணே யுள

... குறள்

# வலம்புரி

## மௌனம் ஏனோ?

பிரபல பத்திரிகையாளரும், வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கத்தின் பொருளாளருமாகிய திருச்செல்வம் கடந்த 2ந் திகதி கொழும்பில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார். அவரது கைதுக்கான காரணங்கள் இதுவரை தெரிவிக்கப்படாத நிலையில் அவரது மனைவி கூட அவரைப் பார்வையிட அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

பொதுவாகப் பத்திரிகையாளர்கள் படையினரால் கைது செய்யப்படும்போது 'விடாத பிடி' என்று குரல் கொடுக்கும் பத்திரிகையாளர் சங்கங்கள் திருச்செல்வத்தின் விடயத்தில் மௌனித்துள்ளமை ஆச்சரியத்தையே தருகிறது. ஏதோ சாட்டுப்போக்குக் கடிதங்களை அனுப்பிவிட்டு? எம் கடமை முடிந்து விட்டது என்ற போக்கில் உள்ளனர். யாழ்ப்பாணத்துப் பத்திரிகையாளர் திருச்செல்வத்தின் கைது குறித்து யாழ்ப்பாணத்திலுள்ள மனித நேய அமைப்புகள் பேசாதிருப்பது புரியாத புதிராகவே உள்ளது. அதைவிட வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கத்தின் போக்கு மிகவும் வேதனைக்குரியது.

தனது சங்கத்தில் அங்கத்துவம் வகிக்காத பத்திரிகையாளர் தாக்கப்பட்டபோது விழுந்தடித்துக் கொண்டு கண்டித்த அந்த அமைப்பு தனது சங்கத்தின் முக்கிய பதவியில் பொருளாளராக இருக்கும் திருச்செல்வத்தின் கைது குறித்து மருந்துக்கு ஒரு கடிதம் அனுப்பிவிட்டுப் பேசாதுள்ளது.

உண்மையில் திருச்செல்வத்தை விடுதலை செய்யக்கோரி யாழ்ப்பாணத்தில் பத்திரிகையாளர்களை ஒன்றிணைத்து ஆர்ப்பாட்டம் செய்ய வேண்டிய சங்கம், யாழ் நகரப் பகுதியில் கைகளைக் கட்டிக்கொண்டு இதுதான் இலங்கையில் பத்திரிகைச் சுதந்திரம் என்று உலகறியக் குரல் கொடுக்க வேண்டிய வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கம் மௌனமாக இருப்பதைப் பார்க்கும்போது வேடிக்கையாக உள்ளது.

திருச்செல்வத்தின் கைது குறித்து பிரான்ஸ்நாட்டுப் பத்திரிகையாளர் அமைப்புக்கு இருந்த அக்கறை, அறிக்கையில் மட்டும் உயிர் வாழும் மனிதநேய அமைப்புக்கு இல்லாமற் போனமை ஏனைய பத்திரிகையாளர்களுக்கு நல்லதொரு பாடமாகும்.

# நம் தமிழ் சிதைவின்றிச் செழித்து வளர உதவும்

# சிறந்த நூல்: "செந்தமிழ் இலக்கண விளக்கம்"

முதுபெரும் புலவர்

**வை.க. சிற்றம்பலம்**

ஒய்வுபெற்ற ஆசிரியர்

தக்க காலத்தில் தமிழ் மொழி வரம்பைக் காக்க வந்த தமிழ் இலக்கண நூல் தான் செந்தமிழ் இலக்கண விளக்கம் என்னும் அரும் பெரும் இலக்கண நூல் இக்காலத்தில் ஆசிரியர்களும் கற்பிக்கத் தெரியாமல், மாணவரும் அறிந்து கொள்ள முடியாமல் இலக்கியமும் இலக்கணமும் அலக்கணுறும் இந்நேரத்தில் பல்கலையுஞ் சிறந்து விளங்கும் தெய்வத் தன்மை குறையாத அள

### திறனாய்வுக் களம்

வெட்டியூரையே நாயகமாகக் கொண்ட பெரியார் பண்டிதர் க. நாகலிங்கம் அவர்களால் எழுதி வழங்கப்பட்ட நூல் இது.

பயிற்றப்பட்ட ஆசிரியரும் மதுரைத் தமிழ்ப் பண்டிதரும் டிப்ளோமா பட்டம் பெற்றவரும் ஆகிய இந்நூலாசிரியர் அருணோதயக் கல்லூரித் தலைமைத் தமிழ்ப் பண்டிதராயிருந்து ஓய்வு பெற்றவர். அன்னார் பரமேஸ்வராக் கல்லூரியில் கடந்த பண்டித பயிற்சிக் கலாசாலையிற் பயின்றவர் அங்கே இலக்கிய இலக்கணமேதை பண்டிதமணி க.சு நவநீத கிருஷ்ண பாரதியார் வித்துவான் கார்த்திகேசு புலோலியூர் வ. குமாரசாமிப் புலவரின் மகன் கலாநிதி சிவப்பிரகாசம் முதலியவர்களே ஆசான்களாகக் கொண்டு படித்தவர்.

### இலக்கிய இலக்கணம் கற்பித்தல்

சுமார் ஐம்பது வருடங்களின் முன் இலங்கையில் சிறப்பாக யாழ்ப்பாணத்தில் தகுதி வாய்ந்த உயர்தர வகுப்புக்கள் உள்ள பள்ளிக் கூடங்களிலும் கல்லூரிகளிலும் தக்கபடி இலக்கிய இலக்கணங் கற்பிக்கப் பட்டு வந்தது. தக்கவர்களாலெழுதப்பட்ட வாசிப்புப் புத்தகங்களையும் சமயபாடப் புத்தகங்களையும் பயன்படுத்தினர்.

பாஷைஎன்றஒருபாடத்தை வைத்து இலக்கணம்கட்டுரை சொல்வதெழுதல் வாசிப்பு முதலியனவற்றை விருத்தி செய்தனர். அதனால் தமிழ் நன்றாக வளர்ச்சியடைந்து வருவதாயிற்று. ஆனால் இன்று அரசாங்கம் புத்தகங்களை அச்சேற்றும் நிலையும் அவற்றையே கற்பிக்கவேண்டுமென்றும் கட்டளையும் தப்பாமற் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

### தகுதி வாய்ந்த மாணவர்

தனிப்பட இலக்கணங் கற்பித்த காலத்தில் ஆறாம் ஏழாம் வகுப்புக்களில் நன்னூல் எழுத்தியல், பதவியல், பெயரியல், வினையியல் என்பனவும் எட்டாம் வகுப்பில் புணரியலும் சிரேஷ்ட வகுப்பில் நன்னூற் காண்டிகை முழுவதுங் கற்பிக்கப்பட்டன. அதனால் அன்று படித்த மாணவர் எல்லாந் தகுதி வாய்ந்த புலமை பெற்றிருந்தனர். உயர்தர வகுப்பிற் கற்ற மாணவருட் சிலர் மரபுவழி செய்யுளியற்றவும் ஆற்றல் பெற்றிருந்தனர். இன்று இந்நிலைமாறிஇலக்கண விதிகளைக் கைவிட்டு எங்கள் தமிழைச் சிதறடிக்கும் வகையில் புதிய முறையென்றைக் கையாண்டு வருகின்றனர். அதன் படிஒருவிளக்கமுமில்லாமல் எதிர்ச்சொல், எதிர்ப்பாற்சொல் ஒருமையைப் பன்மையாக்குதல் பன்மையை ஒருமையாக்குதல், உடன்பாட்டை எதிர்மறையாக்குதல் எதிர்மறையை உடன்பாடாக்குதல், நல்வினை. பிறவினை, செய்வினை, செயப்பாட்டுவினை முதலியனவும் அப்படியே கிளிப்பிள்ளைப் பாடமாக ஒரு விளக்கமுமில்லாமல் கற்பிக்கப்படுகின்றன. பகுபதம், பகாப்பதம் பற்றியும் விளக்கம் இல்லாமற் கற்பிக்கின்றனர். குற்றியலுகரம் வேற்றுமை, ஆகு பெயர் என்பனவும் விளங்காமல் விளங்குகிறார்கள்.

### தமிழுக்குச் சாபக்கேடு

ஆசிரியர் படிப்பித்தவற்றை மாணவர் அப்படியே படம் பிடித்து அதே உதாரணங்களை எழுதிச் சித்தியடைந்து ஆசிரியர்களாகியும் விட்டனர். இவர்களிடங் கல்விகற்று மாணவர்களும் உயர்ச்சி பெற்று ஆளாகிவிடுகின்றனர். இந்தநிலை தமிழுக்கோர் சாபக்கேடாக அமைந்தது. அதனாற் படித்தவர்களிடமிருந்து நல்ல தமிழையோ, கட்டுரைகளையோ சொற்பொழிவுகளையோ எதிர்பார்க்கமுடியாத நிலை உருவாகி வந்து கொண்டிருக்கிறது இலக்கண வரம்பற்ற வேறு மொழிகளில் இந்நிலை ஏற்றுக் கொள்ளப்படலாம். ஆனால் ஆயிரக்கணக்கான வருடங்களுக்கு முற்பட்ட எமது மொழி திறம்பட்ட இலக்கண வரம்புகளையுடையது. அதனைச் சீர்பட நாம் பயன்படுத்த வேண்டும். இந்நிலையில் தமிழன்னையைப் போற்றுவோமென்று கூறித் தூற்றுவோரிடம் தங்காமல் அவள் யாழ்ப்பாணத்தையே தஞ்சமாக அடைந்துள்ளாள் என்பது உலகறிந்த விடயம்.

### சீரிய இலக்கண நூல்

தமிழன்னையின் துன்பங் கண்டு மாணவர் இடர்ப்படாவகையில் ஆசிரியர்களும் படித்துய்ய வேண்டுமென்னும் உள்ளங் கொண்டு காலத்தால் செய்தஉதவியாக பண்டிதர் க. நாகலிங்கம் அவர்களால் ஆக்கப்பட்டதே செந்தமிழ் இலக்கண விளக்கம் என்னுஞ் சீரியநூலாகும். நமது வனாளிற் பல பண்டிதர்களை உருவாக்கிய இப்பெரியார், ஒருதந்தை தனது செல்ல மகனுக்கு எவ்வளவு ஆதரவாக இதமாக இலக்கணத்தை ஆரம்பத்திலிருந்தே விளக்கித் துலக்கிக் கற்பிப்பாரோ அவ்வளவு இலகுவான விளக்கத்துடன் நன்றாக எழுதித் தந்திருக்கிறார்கள், உதாரணத்துக்கு சார்பெழுத்து, உயர்திணைபற்றிய நன்னூலார் கருத்திலுள்ள பிழைபாடு, சொற்புணர்ச்சி பற்றிய விளக்கம், இயற்சொல்திரிசொற்பற்றிய நன்னூல் உரையாசிரியர்களின் தவறானகருத்து, நால்வகைச் சொற்பற்றிய தெளிவான விளக்கம், போலியைச் சந்தியக்கரமாகக் கொண்ட உரையாசிரியர் கருத்து. நன்னூலாசிரியர் கருத்துக்கு முரண்படுவது முதலிய பலபலவற்றைக் கூறலாம் இரட்டைக்கிழவி, இணைமொழி, அடுக்குத் தொடர், அடுக்கிடுக்குத் தொடர் என்பன மிகத் துல்லியமாகவும் அழகாகவும் விளக்கப்பட்டுள்ளமை புதுமையானது.

### நாவலரின் பின்

தொல்காப்பியம், நன்னூல், சின்னூல்என்றும் நேமிநாதம், வீரசோழியம், பிரயோக விவேகம், இலக்கணக் கொத்து, தொல்காப்பியச் சூத்திரவிருத்தி முதலாய நூல்களை முன்னூல்களாகக் கொண்டும், தமது அனுபவத்தையும் அறிவையும் பயன்படுத்தியும் அவற்றின்வழிநூல் என்னும் வகையில் இந்நூலை வெளியிட்டுள்ளார்கள். நாவலரின் பின் சிலர் தொடர்பில்லாமல் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு சுருக்கம் எழுதி வெளியிட்டுள்ளார்கள். எனினும் அவை தொடர்பும் விளக்கமும் அற்றவை சுருக்கமாகக் கூறின் நாவலரையாவின் இலக்கணச் சுருக்கம், நன்னூற் காண்டிகையுரை என்பனவற்றின் பின் காலத்திற்கேற்ற வகையில் இலகுவாகவும், தெளிவாகவும் மலைவு அற்றதாகவும் வெளிவந்த முதல் நூல் பண்டிதரின் செந்தமிழ் இலக்கண விளக்கம் எனலாம். உயர்தர வகுப்புக்களிற் கற்கும் எல்லா மாணவர்களிடமும் தமிழ் மொழி கற்பிக்கும் எல்லா ஆசிரியர்களிடமும் இருக்க வேண்டிய நூல் இது வென்பது எமது கருத்து தமிழன்னைக்கு இவ்வாறே மேலும் பல நூல்களை எழுதிவெளியிடவும் உயர் கல்வி மாணவர்க்கு இலக்கண இலக்கியங்களைப் பரோபகார சிந்தையுடன் கற்பிக்கவும் இவர் நீடூழிகாலம்வாழ அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையாரை வேண்டுகிறேன்.

* * *

வடக்கு- கிழக்கின் முதலாவது

## வினாகிரி தொழிற்சாலை நேற்று திறந்து வைப்பு

மானிப்பாய் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் வினாகிரித் தொழிற்சாலை நேற்று திறந்து வைக்கப்பட்டது.

10 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட இத்தொழிற்சாலைக்கு வேண்டிய வினாகிரி உற்பத்திஇயந்திரத்தினை யாழ்ப்பாணம் புறே மோட்டோர்ஸ் கொம்பனி தயாரித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

மேற்படி தொழிற்சாலைக் கட்டடத்தை பனைஅபிவிருத்திச் சபைத் தலைவர் மு பாக்கிய நாதன் நாடா வெட்டித் திறந்து வைத்தார்.

வினாகிரி உற்பத்தி இயந்திரத்தை வலிதென்மேற்கு பிரதேச சபைத் தலைவர் அன்ரன் வெலிச்சோர் முதன் முதலாக இயக்கி வைத்தார்.

மூன்றுமாதகால தற்காலிக அனுமதியுடன் பரீட்சார்த்தமாக இயங்கவுள்ள இத்தொழிற்சாலை வெற்றிகரமாக செயற்படும் பட்சத்தில் இகதற்கான நிரந்தர அனுமதி வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

வடக்கு- கிழக்கில் அமைக்கப்பட்ட முதலாவது வினாகிரித்தொழிற்சாலையில் இதுவென்பதும், மார்ச்மாதத்தின் பின் இவ்வாறான 4 தொழிற்சாலைகள் வடக்கு கிழக்கில் அமைக்கப்படவுள்ளதாகவும் பனை அபிவிருத்திச் சபைத்தலைவர் தனது உரையில் குறிப்பிட்டார். (உ-12)

## நலனோன்பு சங்கம் கூட்டம்

பச்சிலைப்பள்ளி இடம் பெயர்ந்தோர் நலனோன்புச் சங்கத்தின் மாதாந்தக் கூட்டம் இன்று மு.ப 10.00 மணிக்கு பளைப்பிரதேச செயலக யாழ் அலுவலகத்தில் தலைவர் சு. தவரட்ண சிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

உறுப்பினர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு மேற்படி சங்கச் செயலாளர் கேட்டுள்ளார். (உ-03)

## மதிய உணவு நேரத்தை அதிகரிக்கக்கோரி ஐவர் உண்ணா விரதம்

### கம்பஹாவில் சம்பவம்

(கொழும்பு)

மதிய உணவு அருந்துவதற்கென ஒதுக்கப்படும் நேரத்தைக்கூட்ட கோரி கம்ஹா வெலிவேரிய சுதந்திர வர்த்தக வலய தொழிற்சாலை ஊழியர்கள் 5 பேர் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

மேற்படி தொழிற்சாலை ஊழியர்க்கு மதிய உணவு இடைவேளையாக இதுவரை நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த 15 நிமிடநேரம் குறைக்கப்பட்டு 5 நிமிடமாக்கப்பட்டதை ஆட்சேபித்தே இவ் உண்ணாவிரதப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஏனையஆயிரக்கணக்கான ஊழியர்கள்இதற்குஆதரவாக வேலைப்புறக்கணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். (உ)

## அனுமதியின்றி சுற்றுமதில் அமைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பழைய பூங்காவுக்கான சுற்று மதில் அமைப்பு தமது அனுமதியின்றி இடம் பெறுகிறது என்பதனை சுட்டிக்காட்டி யாழ். மாநகசபையால் யாழ். செயலகத்திற்கு கடிதம் ஒன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இது குறித்து, யாழ். செயலகம் எழுதியுள்ள பதில்கடிதத்தில், புதைபொருள் ஆராய்ச்சி நிலையத்திற்கு அறிவிக்கப்பட்ட பின்னரே தாம் பழைய பூங்கா புனரமைப்பு வேலைகளில் ஈடுபட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளதாய் தெரியவந்துள்ளது. (உ-12)

# களுத்துறை சிறையிலுள்ள 11 தமிழ் இளைஞர்களை விடுவிக்க அனுமதி

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் கைது செய்யப்பட்டு களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருப்போரில் பதினொரு பேரை விடுதலை செய்வதற்கான அனுமதியை சட்டமா அதிபர் திணைக்களம் வழங்கியுள்ளது.

யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த இவர்களை யாழ். மஜிஸ்திரேட் நீதிமன்றில் ஆஜர் செய்து விடுவிக்குமாறு சட்ட விரோதக் கைதுகள், துன்புறுத்தல்களுக்கான ஜனாதிபதிக்குழு ஆலோசனைவழங்கியுள்ளது.

சின்னையா அற்புதராசா, இராசரத்தினம் பஞ்சலிங்கம், சிவராசா சுதர்ஷன், சிறில் ஷெல்டன் நிரோஷ், குணரட்ணம் குணசீலன், முத்துலிங்கம் ஜெயானந்தன், பொன்னன் உதயகுமார், சிவலிங்கம் கமலேஸ்வரன், தேவநாயகம் றொனால்ட், சின்னத்துரை இந்திரகுமார், கார்த்திகேசு கலைரூபன் ஆகியோரையே விடுதலை செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இம் மாதம் 2 ஆம் திகதி விடுதலை செய்யுமாறு அனுமதி வழங்கிய போதும் யாழ்ப்பாணம் செல்ல போக்குவரத்து வசதி சீரின்மையால் இவர்கள் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இதே வேளை மேற்படிநபர்களின் விடுதலை தொடர்பாக யாழ்ப்பாணத்திலுள்ள உறவினர்கள் யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறையிட்டால், யாழ். மஜிஸ்திரேட் நீதிபதியின் அனுமதியுடன் கொழும்பு மஜிஸ்திரேட் நீதிபதி முன்னிலையில் இந் நபர்களை விடுவிக்க உத்தரவைப் பெற முடியுமென்று பொலிஸ் தலைமையக நீதிமன்ற விவகாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (இ)


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை,
வெளிவாரிப்பதிவுகள் பரீட்சைகள் அலகு.
வெளிவாரிப் பரீட்சைகள்.

அறிவித்தல்

பொதுக் கலைத் தேர்வு பகுதி - 1 - 1999

17-01-2001 அன்று நடைபெறத் தவறிய கீழ்க்காணும் பாடங்கள் 01-02-2001 அன்று நடைபெறும்.

9-30—12-30 வர்த்தக கைத்தொழில் சட்டம் EX.COM 2.2

1-00—4-00 பேரினப் பொருளியல் EX.ECN 2.2

பதிவாளர்.

(கி-1343)



ஸ்ரீசெல்வா
(யாழ்ப்பாணம்)
விஜயகாந்த், நாசர், பிரகாஷ்ராஜ், ரம்யா நடித்த
வாஞ்சிநாதன்
10-30 (ப. நே)

அஜித், லைலா நடித்த
தீனா
2-30 (ப. நே)
[வெட்டுப்படாத முழுமையான காட்சி 2-45 மணித்தியாலப் படம்]


## கூட்டுறவுக்கல்லூரி திறப்பு விழா

வடகிழக்குமாகாண கூட்டுறவுப்பயிற்சிக்கல்லூரி நாளை வடகிழக்குமாகாண பிரதம செயலாளர் ஜி கிருஸ்ணமூர்த்தியினால் திறந்துவைக்கப்படவுள்ளது.

இக்கல்லூரிவவுனியா பூந்தோட்ட தொழிற்பேட்டைக்கு அருகாமையில் சுமார்70 லட்சம்ருபா செலவில்அமைக்கப்பட்டுள்ளது,

வடக்குகிழக்கு மாகாண கூட்டுறவுஅமைச்சினால் கட்டப்பட்டுள்ள இக்கல்லூரியில் கூட்டுறவுப் பரிசோதகர்கள் கூட்டுறவுச்சங்கப் பொதுமுகாமையாளர்கள் ஆகியோருக்கும் பயிற்சிகள் வளங்கப்படவிருக்கின்றன. (வ)

### மட்டு.மாவட்ட--

கூடாது என மட்டக்களப்பில் பாதுகாப்பு படையினரால் நேற்று விடுக்கப்பட்ட அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பேச்சுவார்த்தைக்கும் யுத்த நிறுத்தத்திற்கும் ஹர்த்தால்கள் தேவை இல்லை.விடுதலைப் புலிகளுடனான பேச்சு வார்த்தைக்கு எந் நேரமும் கதவு திறக்கப் பட்டுள்ளது. சமாதானத்தைக் காண அரசிற்கு ஆதரவு வழங்குங்கள். படையில் சேர்ந்து கொள்ளுங்கள். என்று தெரிவிக்கப்பட்டுள்ள அந்த அறிக்கையில் பாதுகாப்புப் படையினரின் அனுமதியின்றி மேற்கொள்ளப்பட்டுள்ள சகல ஹர்த்தால்களும் தடை செய்யப்பட்டுள்ளது என்றும் கடைகளை அடைப்பதோ, போக்குவரத்து சேவைகளை நிறுத்துவதோ தடைசெய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யுத்த நிறுத்தம் சமாதானப் பேச்சு வார்த்தைகளைக் கோரி ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இத்தகைய ஹர்த்தால்களிலும் வெகு ஜனப் போராட்டங்களிலும் விடுதலைப் புலிகளின் பின்னணி இருப்பதாகவும் பாதுகாப்புத் தரப்பின் அந்த அறிக்கை கூறுகின்றது. (வ)

## ஐயாயிரம் ரூபா கொடுப்பனவு

யாழ்பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட ஜே-62 தொடக்கம்ஜே—64, ஜே—66 தொடக்கம் ஜே—71, ஜே—73தொடக்கம்ஜே–76, ஜே—78தொடக்கம்ஜே—83, ஜே—85தொடக்கம்ஜே—87, ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த சுமார் 258குடும்பங்களுக்கு ஐயாயிரம் ரூபா கொடுப்பனவு அவர்களது வங்கிக் கணக்கிற்கு அனுப்பிவைச்கப் பட்டுள்ளது

மேற்படி கொடுப்பனவை பெறவுள்ளவர்கள் தத்தமது கிராம சேவையாளர் களுடன் தொடர்பு கொண்டு தமது பெயர்களை உறுதிப்படுத்தி கொடுப்பனவுகளை எதிர் வரும் 21ந்திகதிக்குப் பின்னர் பெற்றுக்கொள்ளுமாறு யாழ் பிரதேச செயலர்செந்தில்நாதன் கேட்டுள்ளார், (ந-42)

### ஜனநாயக---

தவறிவிட்டது.

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசினால் நடாத்தப்பட்ட வடமேல் மாகாண சபைத் தேர்தல் முதல் அண்மையில் நடைபெற்று முடிந்த பொதுத்தேர்தல் வரை வன்முறை மற்றும் ஊழல்கள் நிறைந்ததாகவே நடாத்தப் பட்டது. இதனால் நாட்டின் ஜனநாயகத்திற்கு பெரும்அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது

இத்தகைய அச்சுறுத்தல்களுக்கு எதிர்ப்பைத் தெரிவித்து அடுத்த மாதம் முதல் ஐக்கியதேசியக் கட்சி வீதியில் இறங்கிப்போராட்டம்நடத்த உத்தேசித்துள்ளது.

சர்வதேச ஜன நாயக சங்கம் ஏற்பாடு செய்திருந்த இம் மாநாட்டில் 30 க்கும் மேற்பட்ட நாடுகளின்பிரதிநிதிகள் கலந்து கொண்டுள்ளனர்.

நேற்று வெள்ளிக்கிழமை ஆரம்பமான மாநாடு நாளை ஞாயிற்றுக்கிழமைவரை நடைபெறவுள்ளது. இக் கூட்டத்தில் ஐக்கிய தேசியச் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் எம். ஜயலத் ஜெயவர்த்தனாவும் கலந்து கொண்டார்.

இதே வேளை சர்வதேச ஜன நாயக சங்கத்தின் மாநாடு மார்ச் மாதம் அமெரிக்காவிலும் நடைபெறவுள்ளது. இம் மாநாட்டிற்கு அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் தலைமை வகிக்கவுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (வ)


விளம்பரக் கட்டணம் குறைப்பு

வர்த்தகப் பெரு மக்களுக்கு அரிய வாய்ப்பு:

வலம்புரியின் முதலாவது ஆண்டு நிறைவை யொட்டி 2001ஆம் ஆண்டில் விளம்பரக் கட்டணம் மேலும் குறைக்கப்பட்டுள்ளது.

குறைந்த கட்டணத்தில் மனம் நிறைந்த விளம்பரம் செய்ய வலம்புரியை நாடுங்கள்.

நிர்வாகம்



நாகம்ஸ்
(சுன்னாகம்)
டைட்டானிக்
(தமிழ் ரீல்ஸ்)
10-30, 2-30 (பு. நே)


# ஆய்வுநூலகத்துக்கு இன்று அடிக்கல் நாட்டப்படும்

தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானத்தில் இன்று அறநெறி பாடசாலை ஒன்றை ஆரம்பித்து வைக்கவுள்ளனர்.

துர்க்கா தேவஸ்தானத்தின் நிர்வாக சபை தலைவராகஇருந்து 25 வருடங்களைப் பூர்த்தி செய்யும் சிவத் தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் சேவை குறித்து இந் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இவ்வேளை சைவ ஆய்வு நூலகத்தின் அடிக்கல் நாட்டும் வைபவமும் இடம் பெறவுள்ளது. நூலக கட்டிடத்தின் அடிக்கல்லை சிவத்தமிழ் அன்னையே நாட்டி வைக்கவுள்ளார். (வ)

# மட்டு. ஹர்த்தாலுக்கு மாணவர் ஒன்றியம்ஆதரவு

அரசாங்கம் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் யுத்தத்தை நிறுத்தி பேச்சு வார்த்தையை ஆரம்பிக்க வேண்டுமென்பதை வலியுறுத்தி மட்டக்களப்பு மாவட்டத்தில் இன்று சுதந்திர மாணவர் முன்னணியின் ஏற்பாட்டில் இடம் பெறும் ஹர்த்தால் போராட்டத்துக்கு தமது முழுமையான ஆதரவை வழங்குவதாக யாழ். பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது.

இப் போராட்டத்துக்கு ஆதரவை வழங்கும் வகையில் இன்று யாழ். குடாநாட்டு மாணவர்கள் மற்றும் பொது மக்கள் அனைவரும் கறுப்புப் பட்டி அணிந்தும், வர்த்தக சமூகம் தமது வர்த்தக நிறுவனங்களுக்கு முன்னால் கறுப்புக் கொடிகளைப் பறக்கவிட்டும் ஆதரவை வெளிப் படுத்துமாறு யாழ் பல்கலைக் கழக மாணர் ஒன்றியம் கோரிக்கையொன்றை விடுத்துள்ளது. (இ-43)

# யாழ். பல. நோ. கூ. சங்க நிர்வாகத்தை மாற்றுக

## மகேஸ்வரன் எம்-பி கோரிக்கை

(கொழும்பு)

யாழ்ப்பாணம் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் பல தவறுகள் இடம் பெற்று வருவதால் அச்சங்கத்தின் நிர்வாகத்தை கலைக்க வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன் வடக்கு கிழக்கு மாகாண ஆளுநர் அசோகா ஜெயவர்த்தனா விடம் கோரியுள்ளார்.

யாழ் மாவட்டத்தின அபிவிருத்திதொடர்பாககொழும்பில் வடகிழக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்திலேயே இவ்வாறு கோரியுள்ளார்.

இக் கூட்டத்தில் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொண்டார்கள்.

யாழ்ப்பாணம் பல நோக்கு கூட்டுறவு சங்கத்தின் நிர்வாகத்தை கலைக்க வேண்டுமென ஐ.தே க எம் பி தி. மகேஸ்வரன் விடுத்த கோரிக்கையை ஈ பி. டி. பி யின் எம்.பி எஸ். தவராஜாவும் ஆதரித்து சங்க நிர்வாகம் கலைக்கப்பட வேண்டுமென வலியுறுத்தி ஆளுநரை கேட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பான விசாரணைகளை மேற் கொள்ள இருவர் கொண்ட குழுவை யாழ்ப்பாணம் அனுப்பி நடவடிக்கை எடுப்பதாக ஆளுநர் உறுதியளித்தார். (வ-4)

# 14 இராணுவம் காயம்

[கொழும்பு]

கினிகிர-9 இராணுவ நடவடிக்கை மூலம், கைப்பற்றப் பட்ட பகுதிகளை படையினர் பலப்படுத்திக் கொண்டிருக்கும் போது விடுதலைப் புலிகள் நடாத்திய மோட்டார்த், தாக்குதலால் 14 இராணுவத்தினர் காயமடைந்துள்ளதாக விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்து உள்ளது. [இ]

### திருச்செல்வத்தை...

விசகு தெரிவிக்கப்படவில்லை மனைவி இவரை பார்வையிடவோ அல்லது இவருக்கு மாற்று உடை வழங்கவோ அனுமதியளிக்கப்படவில்லை.

இவ் விடயத்தில்ஜனாதிபதி தலையிட்டு தாமதமின்றி நீதி நியாயம் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் பத்திரிகையாளர் எம்.நிமலராஜனின் படுகொலை, திருச் செல்வத்தின் கைது ஆகிய சம்பவங்கள் யாழ் குடாநாட்டுப் பத்திரிகையாளர்கள் சுதந்திரமாகச் செயற்படுவதற்கு அச்சுறுத்தலாக அமையும் என்றும் அக்கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவ் விடயம் குறித்து வீ. ஆனந்தசங்கரி தொல்லை தவிர்ப்புக் குழுவிற்கும் அறிவித்துள்ளார். (ம)

### வன்னிப்...

மத்தியில் பதற்றம்நிலவிக் காணப்பட்டது.

இக்குண்டுவீச்சு சம்பவத்தின்போது ஏற்பட்டசேதவிபரங்களோ எப்பகுதியில்குண்டுத்தாக்குதல் நிகழ்த்தப்பட்டதென்ற தகவல்கள்இச்செய்திஎழுதும்வரை கிடைக்கவில்லை.

தமிழீழவிடுலைப் புலிகளின் ஒருதலைப்பட்சமான யுத்த நிறுத்தஅறிவிப்பை அடுத்து குண்டு வீச்சுவிமானம் மேற்கொண்ட கண்மூடித்தனமான தாக்குதல்களை வவுனியா தமிழ் வட்டாரங்கள் வன்மையாகக் கண்டித்துள்ளன. (ம)

# புலிகள் தரப்பில் உயிரிழந்தோர்

(வவுனியா)

கடந்த டிசம்பர் 22ம் திகதி கைதடி, கோப்பாய், அரியாலைப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட பாரிய இராணுவ நடவடிக்கையின் போது ஏற்பட்ட மோதலில்

- லெப்.பிரசாந்தி (சிவலோகராசாசிவமாலினி) யாழ்ப்பாணம்
- மேஜர். ஈழம்/மெய்யறிவு (வல்லிபுரம் ஸ்ரீதரன்) யாழ்ப்பாணம்
- வான்நிலா (தியாகராஜா தெய்வகாந்தி) விசுவமடு
- கப்டன். குட்டி (இராசரட்ணம் காண்டீபன்) யாழ்ப்பாணம்

ஆகிய போராளிகள் தமது தரப்பில் உயிரிழந்துள்ளதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர். (ந-5)

இப் பத்திரிகை ''வலம்புரி'' அன்கோ ஸ்தாபனத்தினரால் இல. 15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம், எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 20ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது!